விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 120 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 05 வெள்ளிக்கிழமை (18.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## உறவுகளின் வலியை நான் நன்கறிவேன்
## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது பகிரங்கப்படுத்தப்படும்

### யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி உறுதி

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சகல தகவல்களையும் விரைவில் பகிரங்கப்படுத்துவோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

நேற்று நல்லூர் சங்கிலியன் தோப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்

15ஆம் பக்கம் பார்க்க




## திஸ்ஸ விகாரைப் பிரச்சினை இலகுவில் தீர்க்கப்படக்கூடியது

### அரசியல்வாதிகளால் குழப்பம் - அநுர

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தையிட்டியில் திஸ்ஸ விகாரைப் பிரச்சினை இருக்கின்றது. அதனை இலகுவாகத் தீர்க்க முடியும். அதற்கு அந்த விகாரையை வைத்து வடக்கில் அரசியல் செய்பவர்கள் அதில் இருந்து விலக வேண்டும். அதேபோன்று தெற்கிலும் அந்த விகாரையை வைத்து அரசியல் செய்பவர்கள் அதைக் கைவிட வேண்டும்.

அவ்வாறு அரசியல்வாதிகள் விகாரை பிரச்சினையில் இருந்து விலகுவார்

15ஆம் பக்கம் பார்க்க

## போரால் எம் உறவுகளை இழந்தோம்
## இனி அந்த நிலை எமக்கு வேண்டாம்

- எங்கள் தலைமுறை சமாதானமாக வாழட்டும்
- படையினரின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்

### யாழில் ஜனாதிபதி அநுர உரை

(யாழ்ப்பாணம்)

போர் இனவாத அரசியல்வாதிகளுக்கே தேவை. அது எமக்கல்ல. சகல மக்களுக்கும் சமமான உரிமை வேண்டும். அவ்வாறான நாடுதான் எமக்குத் தேவை என ஜனாதிபதி அநுர நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்ப்பாண நூலக எரிப்பு இனவாதத்தின் உச்சம்

### ஜனாதிபதி யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் நல்லூர் கிட்டுப் பூங்காவில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் உரை

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் - இராமேஸ்வரம் படகுச் சேவை விரைவில்

### ஜனாதிபதி அநுர உறுதி

(மன்னார்)

மன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்கான பயணிகள் படகுச் சேவை மீள ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதி படத் தெரவித்திருந்தார்.

மன்னார் நகர்ப் பகுதியில்

15ஆம் பக்கம் பார்க்க

## தன் பதவி நிலை மறந்து அநுர தெரிவித்த கருத்தால் பாரிய சர்ச்சை

### தேர்தல்கள் ஆணைக்குழு கடும் கண்டனம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் வெற்றி பெறும் சபைகளுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தேர்தல் பரப்புரை ஒன்றில் தெரிவித்திருந்தமை பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் கருத்தானது மக்களின் வாக்குரிமையினை மீறும் செயல். இது அவரது பதவி நிலைக்கு அழகல்ல என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் தமது அதிருப்தியினை

15ஆம் பக்கம் பார்க்க

### அநுரவின் யாழ்.விஜயத்தில்

## ஊடகங்கள் வாயிலாக காணி விடுவிப்பு கோரிக்கை

### பலாலி பொலிஸார் கடும் அச்சுறுத்தல்

(வயாவிளான்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் செய்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தமது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்த காணி உரிமையாளர்களுக்குப் பொலிஸார் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தேசியமே எமது இருப்பின் அடிப்படை

### அது வெற்றுக் கோசமல்ல - சிறீதரன் எம்.பி



(பூநகரி)

இலங்கைத் தீவின் சுதேசிய இனமான ஈழத் தமிழினத்தின் பண்பாடு, மொழி, கலை, கலாசார, மரபியல்களையும், இனத்துவ உரிமைகளையும் பாதுகாக்க வல்ல அரசியற் கட்டமைப்பான

15ஆம் பக்கம் பார்க்க

## குளத்தில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு

### வரணியில் சம்பவம்

(வரணி)

யாழ்ப்பாணம், வரணி சிட்டிவேரம் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் நீராடிய இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தவசிக்குளம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த சிவராசு சிலுசன் (வயது-23) என்பவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

### ஈஸ்டர் பெருநாள்

## தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆகிய கிறிஸ்தவ பெரு நாட்களில் கத்தோலிக்கத் தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பதில்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்கடத்தல், ஆட்கடத்தல், கொலை செய்தவர்கள் வடக்கிலும் உள்ளனர்



## இவர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

## அமைச்சர் சந்திரசேகர் பரபரப்பு உரை

(யாழ்ப்பாணம்)

வடக்கிலும் மண் கடத்தல்காரர்கள் உள்ளனர், ஆட்களை கடத்தியவர்கள் உள்ளனர். ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்கள் இருக்கின்றார்கள். மக்களின் காணிகளை அபகரித்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எதிராகவும் வெகு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், மருத்துவர் ஸ்ரீ. பவானந்தராஜா, யாழ்.மாநகர சபையின் வேட்பாளர் சு.கபிலன் மற்றும் அமைப்பாளர்கள், வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு அமைச்சர் சந்திரசேகர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் இலஞ்ச, ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக சட்டம் செயற்படும். அவர்களின் முகவரி மகசின் சிறைச்சாலையென மாறுவது உறுதியாகும்.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களும் கம்பி எண்ணி வருகின்றனர். அதேபோல படுகொலைகளில் ஈடுபட்டவர்கள், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும் சட்டம் செயற்படும்.

நாம் இவ்வாறு செயற்படும் போது தேசிய மக்கள் சக்தி அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதாக சிலர் கொக்கரிக்கின்றனர். எமக்கு எவருடனும் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. குற்றமிழைத்தவர்களுக்கு மன்னிப்பும் கிடையாது. சட்டத்தை நாம் கையில் எடுக்கமாட்டோம். நீதிமன்றம் ஊடாகவே அதற்குரிய பணி இடம்பெறும்.

மக்களின் நிம்மதியை சீர்குலைத்தவர்கள் தற்போது நடுங்க ஆரம்பித்துள்ளனர். சந்திரசேகர் ரௌடி எனவும் கூறத்தொடங்கியுள்ளனர். என்னை ரௌடி என அழைப்பது மகிழ்ச்சி. மக்களுக்காக செயற்படுகின்றபோது, மக்களுக்காக குரல் கொடுக்கின்றபோது, மக்களுக்காக எம்மை அர்ப்பணிக்கின்றபோது அதைப் பார்த்து ரௌடித்தனம் என்கின்றனர்.

இதுதான் ரௌடித்தனம் எனில், அதனை ஏற்றுக்கொள்ள நான் தயார். கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் பைல்களை தூக்கித் திரிந்தவர்கள் தான் இப்படி சொல்கின்றனர்.

புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட போது அதனை வரவேற்றவர்கள், இன்றைக்கு தாங்கள் தான் புலிகள் அமைப்பின் அர்ப்பணிப்புமிக்க தலைவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். புலிகள் காலத்தில் துரோகி முத்திரை குத்தப்பட்டவர்கள் இவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-4,7)

## யாழில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் கிரிக்கெட் அணியில் தமிழ் இளைஞர்கள்

### ஜனாதிபதி அநுர வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் அணியில் தமிழ் இளைஞர்களும் உள்ளீர்க்கப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் உரையாற்றியதாவது,

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிக்கிறோம்.

எவ்வாறாவது யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை உருவாக்கி சர்வதேச கிரிக்கெட் போட்டியை நடத்த வேண்டும் என சனத் ஜெயசூரியவிடம் தெரிவித்தேன். அதன் பிரகாரமே அவர் யாழ். வந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

முதல் 10 ஆண்டு காலப்பகுதிக்குள் இலங்கை கிரிக்கெட் அணியில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் உள்ளடங்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் நாம் ஒன்றுப்பட வேண்டும். கல்வி, விளையாட்டு, கலாசாரம், உட்பட அனைத்துத் துறைகளிலும் திறமைக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படும் என்றார்.(ந-4,7)


சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவகாலங்களில் தற்காலிக கடை ஏலம்

எதிர்வரும் 26.04.2025 அன்று ஆரம்பமாகவுள்ள மகோற்சவத்தை முன்னிட்டு தற்காலிக கடை அமைப்பதற்கான ஏலம் கூறல்

- 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும்.
- மேலும் உற்சவ காலங்களில் சைக்கிள், மோட்டார் வாகனங்கள் பாதுகாப்பு சேவை நடாத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் விரும்பத்தக்கது.


குறிப்பு: ஏலத்தில் கடை எடுப்பவர்கள் அன்றைய தினமே முழுப் பெறுமதியினை அல்லது அரைவாசியினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

தர்மகர்த்தா சபையினர் மற்றும் இந்து இளைஞர் மன்றத்தினர்
சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம், சீரணி சண்டிலிப்பாய்.

T.P No : 021 225 1191, 077 421 2920, 0776531622, 0772487574

(C-2738)


# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சிறுவர் பெண்கள் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.சி.நந்தகுமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் **செல்லையா சிவப்பிரகாசம்**
(ஆனந்தபவனம், திருநாவலூர், புலோலிமேற்கு)

தோற்றம் [illegible]1.08.1947 மறைவு 17.04.2025

அவர்கள் 17.04.2025 அன்று லண்டனில் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், [illegible]

(C-2734)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் புலனாய்வுத் துறையினர்

## சமூக, சமாதான நிலையப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல்களின் பின்னணியில் நாட்டின் புலனாய்வுத்துறையினர் இருப்பது தெரியவந்துள்ளதாகச் சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் புலனாய்வுத் துறையினர் ஏப்ரல் 21 தாக்குதல்களின் பின்னணியில் இருக்கின்றார்கள், தாக்குதல்களை மேற்கொண்டவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணினார்கள் என்பது விசாரணை அறிக்கைகள் ஊடாக எமக்குத் தெரியவந்துள்ளது.

தாக்குதலின் பின்னணியிலிருந்த பிரதான சூத்திரதாரி யார் என்பதை அடையாளம் காண முடியாதளவிலேயே நாட்டின் பாதுகாப்புத்துறை காணப்படுவதாக சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ரொஹான் சில்வா தெரிவித்துள்ளார். (நி-8)

# அரச மருத்துவமனைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

கொழும்பு தேசிய மருத்துவமனை உட்பட நாடு முழுவதும் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் உயிர் காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுவதாக தெரியவருகின்றது.

நீரிழிவு நோயாளிகளுக்கு செலுத்தப்படும் இன்சுலின் தேசிய மருத்துவமனை கிளினிக்கில் உள்ள நோயாளிகளுக்குக் கூட வழங்கப்படுவதில்லை என்றும், நாடு முழுவதும் உள்ள பிற மருத்துவமனைகளில் சுமார் மூன்று மாதங்களாக இன்சுலின் உட்பட பல அத்தியாவசிய மருந்துகள் இல்லாமல் இருப்பதாகவும் நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மருத்துவ விநியோகத் துறையிலும் அரச மருத்துவமனைகளிலும் 13 உயிர்காக்கும் மருந்துகளில் மூன்று முற்றிலும் கையிருப்பில் இல்லை என்றும், மருத்துவ விநியோகத் துறையில் 460 அத்தியாவசிய மருந்துகளில் 183 மருந்துகளும், 49 மருத்துவமனைகளிலும் முழுமையாக மருந்துகள் கையிருப்பில் இல்லை என்றும் சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (நி-8)

# அஸ்வெசும கொடுப்பனவுத் திட்டம் மேலும் பயனாளிகளை இணைக்க முடிவு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(மன்னார்)

அஸ்வெசும திட்டத்தில் 400, 000 புதிய பயனாளிகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், 'நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எரிபொருள் விலையைக் குறைத்தோம், மின்சார விலையைக் குறைத்தோம், அஸ்வெசும கொடுப்பனவை உயர்த்தினோம்.

அதுமாத்திரமின்றி ஜூலை மாதத்தில் இருந்து அஸ்வெசும திட்டத்தில் 400,000 புதிய பயனாளிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.



பாடசாலைப் பிள்ளைகளுக்கு சீருடை மற்றும் கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய் வதற்கு கொடுப்பனவு வழங்கியுள்ளோம்.

மன்னார் - இராமேஸ்வரத்திற்கு இடையில் மீண்டும் படகு சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன் புத்தளம் மன்னார் பாதையை இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

எனவே உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆணையைப் பெற்றுக்கொடுங்கள்." எனத் தெரிவித்தார். (நி-8)

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகப் பிரதி தபால் மாஅதிபர் பிரேமசந்திர ஹேரத் தெரிவித்தார்.

தபால் ஊழியர்களுக்குத் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# ஆடுகளைக் கடத்தியவர்களை மடக்கிப் பிடித்த மக்கள்

## வேலணைப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் திருடப்பட்ட ஆடுகளை யாழ்ப்பாண நகர் பகுதிக்கு கடத்திச் சென்ற இருவரை அப்பகுதி மக்கள் மடக்கிபிடித்து ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் மற்றும் கடத்தி செல்லப்பட்ட 6 ஆடுகள் என்பவற்றையும் மீட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வேலணைப் பகுதியில் ஆடுகளை களவாடி கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவரின் வீடொன்றில் அவற்றை கட்டி வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு அந்த ஆடுகளை வாகனம் ஒன்றில் ஏற்றி யாழ் . நகர் பகுதிக்கு கடத்தி அவற்றை இறைச்சிக்கு விற்பனை செய்யும் நோக்குடன் கொண்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் தகவல் அறிந்த ஊரவர்கள் , வாகனத்தை ஆடுகளுடன் மடக்கி பிடித்ததுடன் ஆடுகளைக் கடத்தி சென்ற மூவரை மடக்கிப் பிடிக்க முற்பட்ட வேளை ஒருவர் தப்பி சென்ற நிலையில் ஏனைய இருவரையும் மடக்கிப் பிடித்தனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட இருவரையும் , கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் ஆடுகளையும் சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஊரவர்கள் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, தீவகப் பகுதிகளில் வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படும் ஆடுகள் , மாடுகள் என்பவை களவாடப்பட்டு, இறைச்சிக்காக யாழ் . நகர் பகுதிக்கு கடத்தி செல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து உள்ளதாகவும், அவற்றினைக் கட்டுப்படுத்தி தமது வாழ்வாதாரத்தை பாதுகாக்குமாறு அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8-33)

# திரவப்பால், தயிருக்கு வற்வரி விலக்கு

## இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டத்தின் படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் தயிர் ஆகியவற்றுக்கு வற்வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் திரவப் பால் மற்றும் தயிர் மீதான வற்வரி நீக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெறுமதி சேர் வரித் திருத்த சட்டமூலம் ஏப்ரல் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன ஏப்ரல் 11 ஆம் திகதி அதற்கு ஒப்புதல் அளித்தார்.

அதன்படி, தொடர்புடைய சட்டம் அந்தத் திகதியில் அமுலுக்கு வந்ததிலிருந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பல வரித் திருத்தங்களைச் செயற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுங்கிப் பாய்கிறது மும்பை சறுக்கி விழுகிறது சன்ரைசர்ஸ்



## வெற்றிப் பாதையில் தடம் பதிப்பு புள்ளிப் பட்டியலிலும் முன்னேற்றம் அடைவு

இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் மும்பை அணி 4 விக்கெட்டுக்களால் ஹைதராபாத்தை வீழ்த்தியது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடந்த போட்டியில் மும்பை - ஹைதராபாத் அணி கள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணியின் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, களத்தடுப்பைத் தேர்வு செய்தார். முன்னாள் அணித் தலைவர் ரோகித் சர்மா, களமிறங்கிய 11 பேர் கொண்ட அணியில் இடம்பெறவில்லை.

**இருவரும் "லக்கி"**

தீபக் சஹார் முதல் ஓவரை வீசினார். முதல் பந்தில் அபிஷேக் சர்மா அடித்த பந்து "சிலிப்" பகுதிக்குச் சென்றது. இதை வில் ஜாக்ஸ் கோட்டை விட, அபிஷேக் கண்டம் தப்பினார். 4ஆவது பந்தில் டிராவிஸ் ஹெட் அடித்தார். இம்முறை "மிட் விக்கெட்" திசையில் இருந்த கரண் சர்மா நழுவவிட்டார்.

சுதாகரித்த இருவரும் டிரன்ட் போல்ட் ஓவரில், தலா ஒரு பவுண்டரி அடித்தனர். தொடர்ந்து சஹார் ஓவரில், அபிஷேக் "ஹட்ரிக்" பவுண்டரி அடித்தார். ஹைதராபாத் அணி 7 ஓவர்களில் 53/0 ஓட்டங்களை எடுத்தது.

இந்த ஜோடியைப் பிரிக்க எடுத்த முயற்சிக்கு எதுவும் பலன் கிடைக்கவில்லை. இதனால், அணித் தலைவர் பாண்ட்யா பந்து வீசினார். இவரது 3ஆவது பந்தில் அபிஷேக் (40 ஓட்., 28 பந்து) ஆட்டமிழக்க, ரசிகர்கள் நிம்மதி அடைந்தனர்.

**இஷான் வருகை**

மும்பை அணிக்காக 7 ஆண்டு (2018-24) விளையாடிய இஷான் கிஷான், ஹைதராபாத் அணிக்காக இம்முறை களமிறங்கினார். 2 ஓட்டங்கள் மட்டும் எடுத்த இஷான், வில் ஜாக்ஸ் பந்தில் வீணாக "ஸ்டம்ப்" ஆனார்.

மீண்டும் வந்த பாண்ட்யா (9.4 ஓவர்) பந்தை ஹெட் அடிக்க, டீப் மிட் விக்கெட் திசையில் கேட்ச் ஆனார். துரதிர்ஷ்டவசமாக இது "நோ போல்" ஆக, மும்பை ரசிகர்கள் சோகம் அடைந்தனர். இப்போட்டியில் இரண்டாவது முறையாக தப்பினார் ஹெட். இருப்பினும் நீண்ட நேரம் தடுமாறிய ஹெட் (28 ஓட்., 29 பந்து), வில் ஜாக்ஸ் சுழலில் சிக்கினார்.

களத்தடுப்பில் ஏமாற்றிய போதும், மும்பை பந்துவீச்சாளர்களின் சிறப்பான செயற்பாடு காரணமாக ஹைதராபாத் அணியின் "ரன்ரேட்" (13 ஓவர், 91/3) மந்தமாக இருந்தது. கிளாசன், நிதிஷ் குமார் இணைந்தனர். சான்ட்னர் பந்தில் நிதிஷ் குமார் ஒரு பவுண்டரி அடித்தார். அடுத்த 13 வது பந்தில் தான் மற்றொரு பவுண்டரி அடிக்கப் பட்டது.

**கிளாசன் நம்பிக்கை**

மீண்டும்ஒன்றும் இரண்டுமாக ரன் எடுக்கப்பட்டன. இந்த நெருக்கடியில் "ஹெலிகாப்டர் ஷொட்" அடித்து ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முயற்சித்த நிதிஷ்குமாரை (19), டிரன்ட் போல்ட் வெளியேற்றினார். 18ஆவது ஓவரை சஹார் வீசினார். இதன் 2ஆவது பந்தில் போட்டியின் முதல் சிக்சரை அடித்த கிளாசன், அடுத்த மூன்று பந்துகளையும் 4, 4, 6 என விளாசினார். இவர் 37 ஓட்டங்கள் எடுத்தபோது, பும்ரா போல்டாகினார். பாண்ட்யா ஓவரில் அனிகேத் வர்மா, அடுத்தடுத்து சிக்சர் அடிக்க ஓட்ட எண்ணிக்கை ஒரு வழியாக 150 ஐ தாண்டியது.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை எடுத்தது. அனிகேத் (18), கம்மின்ஸ் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மும்பை அணி சார்பில் ஜாக்ஸ் 2, டிரென் போல்ட், பும்ரா, ஹர்திக் பாண்டியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

**களமிறங்கிய ரோகித்**

மும்பை அணிக்கு ரிக்கிள்டனுடன், "இம்பேக்ட்" வீரராக வந்த ரோகித் சர்மா இணைந்து ஆரம்பம் வழங்கினர். ரோகித் 26 ஓட்டங்கள் எடுத்த போது, கம்மின்ஸ் பந்தில் வீழ்ந்தார். ரிக்கிள்டன் 23 பந்துகளில் 31 ஓட்டங்கள் எடுத்தார். தொடர்ந்து நம்பிக்கை தந்த கம்மின்ஸ், சூர்யகுமார் (26), வில் ஜாக்சை (36) அவுட்டாக்கினார்.

ஹர்ஷல் ஓவரில் பாண்ட்யா (21), அடுத்தடுத்து 6, 4 என விளாச மும்பையின் வெற்றி எளிதானது.

மும்பை அணி 18.1 ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. திலக் வர்மா (21), சான்ட்னர் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ந-4,7)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது வட்டுவாகல் உதயசூரியன்



முல்லைத்தீவு உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான தமிழ்ப் புத்தாண்டு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினர் தமதாக்கிக்கொண்டனர்.

வற்றாப்பளை, செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத் தலைவர் ச.சதீஸ்கரன் தலைமை வகித் ததுடன் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

குறித்த தமிழ்ப் புத்தாண்டு இறுதிப் போட்டியில் இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியினரும், வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினரும் மோதினர்.

இப்போட்டியின் இறுதிவரை இருஅணிகளும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில், தொடர்ந்து வழங்கப்பட்ட தண்ட உதை மூலம் 5-4 என்ற கோல் கணக்கில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று தமிழ் புத்தாண்டு வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரர் டயான்சன் தெரிவு செய்யப்பட்டதுடன் இத் தொடரின் தொடர் ஆட்ட நாயகனாக வட்டுவாகல் உதய சூரியன் விளையாட்டுக்கழக வீரர் சி.இன்சாத் தெரிவு செய்யப்பட்டார்.

அத்தோடு சிறந்த கோல் காப்பாளராக வட்டுவாகல் உதய சூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு.அஜித் தெரிவுசெய்யப்பட்டதுடன் இத் தொடரின் மக்கள் மனம்கவர் வீரராக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு.அபிசன் தெரிவு செய்யப்பட்டார்.

அதேவேளை இத்தொடரின் சிறந்த அணியாக மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியினர் தெரிவுசெய்யப்பட்டனர். (நி-8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்தியாவுக்கு இடையிலுள்ள மணல் திட்டுக்களை பார்வையிட அனுமதி

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(மன்னார்)

தலைமன்னார் மற்றும் இந்தியாவைப் பிரிக்கும் பாக்கு நீரினைப் பகுதியில் காணப்படும் இலங்கைக்கு சொந்தமான 6 மணல் திட்டுக்களைப் பார்ப்பதற்கான அனுமதி நீண்ட காலங்களாக மறுக்கப்பட்ட நிலையில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்யும் முகமாக குறித்த மணல் திட்டுக்களைப் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சின் ஊடாக கிடைக்கப் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், படகு போக்குவரத்து செய்ய கூடிய முதலீட்டாளர்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட தாமதம், வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்காததன் காரணமாக குறித்த விடயம் தாமதிக்கப்பட்டிருந்தது. எனினும் வருகின்ற 22 ஆம் திகதி அனைத்துப் பங்கு தாரர்கள் விசேடமாக வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச சபை மற்றும் முதலீட்டாளர்கள் எல்லா பங்கு தாரர்களும் இணைந்து ஒரு கூட்டத்தை ஒழுங்கமைத்துள்ளோம். அதன் பின்னர் குறித்த 6 மணல் திட்டுக்களையும் பார் வையிடுவதற்கான ஏற்பாடுகள் மிக விரைவில் இடம்பெற இருக்கின்றது எனவும் தெரிவித்திருந்தார்.

6 மணல் திட்டுக்களில் ஒரு மணல் திட்டில் சுற்றுலாப் பயணிகள் இறங்கி பார்வையிடுவதற்கான ஏற்பாடும் ஏனைய திட்டுக்களை படகில் இருந்தவாறே சுற்றிபார்ப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார். (நி-8-285)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படும் நெல்லியடி முன்பள்ளியின் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளர் கலந்து சிறப்பித்தார். (படம்:மகாலிங்கம்)

## சித்திரைப் புத்தாண்டின் சிறப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தின் 55 ஆவது காலாட் படைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சித்திரைப் புத்தாண்டு சிறப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மரதன் ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம், சறுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கோலம் போடுதல், ஓலை பின்னுதல், முட்டி உடைத்தல், விநோத உடைப்போட்டி, அழகு ராணிப் போட்டி உள்ளிட்ட பல போட்டிகளும் அன்றைய தினம் இரவு 7 மணிக்கு யாழ்.ரியூன்ஸ் இசைக்குழுவின் இன்னிசை இரவு நிகழ்வும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8-3)

# மனித நுகர்விற்கு ஒவ்வாத உணவுப் பொருட்கள்

## அதிரடியாக மூடப்பட்ட வெதுப்பகம்



(முல்லைத்தீவு)

முத்தையன்கட்டுப் பகுதியில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் மனித நுகர்விற்கு ஒவ்வாத 25 கிலோவிற்கு மேற்பட்ட உற்பத்திப் பொருட்கள் அழிப்புச் செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முத்தையன் கட்டுப் பகுதியில் இயங்கிவரும் வெதுப்பகம் ஒன்றிற்கு ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரியின் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனை ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதன்போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற 25 கிலோ கிராமிற்கு மேற்பட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்கள் கைப்பற்றப்பட்டு உடனடியாக அழிப்பு செய்யப்பட்டிருந்தன. குறித்த வெதுப்பகம் சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதனால் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை மூடப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 10 நாட்களில் சுகாதார குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாது இருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுச் சுகாதார பரிசோதகரினால் வெதுப்பக உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.(நி-8-299)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்திய சாயி சர்வதேச நிறுவனம் வழங்கும் 100 ஆவது அவதார தினத்தை நோக்கிய அதிருத்ரத்திற்கான வட பிராந்திய வேத போஷணை திட்டத்தின் 'சாயி ப்ரேமையே வேத சாரம்' எனும் வேதம் பயிற்சிப் பட்டறை தொடர்-2 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை ஊரெழு சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (நி-8-3)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வியாபாரிமூலை - இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற உள்ளது.

சைவப்புலவர் சிவஸ்ரீ இரத்தின திருமாறக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் மகாகும்பாபிஷேக பெருவிழாவானது இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கர்மாரம்பத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிவரை எண்ணெய்க்காப்பு இடம்பெற்று 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.23 முதல் 11.30 மணிவரையான மிதுன இலக்கின சுப முகூர்த்த சுப வேளையில் மகா கும்பாபிஷேகமும் இடம்பெற உள்ளது. அதனைத் தொடர்ந்து மண்டலாபிசேகமும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8-3-60)

# இராசிபலன்

18.04.2025
சித்திரை 05, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 2.19 மணிவரை
மூலம் முழுவதும்

சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
பெரிய வெள்ளி

சந்திராஷ்டமம்- ரோகிணி

வளவன்




அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுபவிரயங்கள் கூடும் நாள்.




குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யானக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்




விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.




ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று இன்பம் தரும்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய முயற்சிகள் கைகூடும், போசன குமுண்டு

குடும்பம் இயற்கையின் சாதனைகளில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சைவப்புலவர் சங்க நிர்வாக சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது .

இவ் நிர்வாகசபைக் கூட்டத்தில் 2025 ஆம் ஆண்டிற்குரிய சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள், பட்டமளிப்பு விழா, சைவநாதம் மலர் வெளியீடு , சைவமாநாடு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதனால் அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (நி-8-3)

# ரவிசங்கர் குருஜியின் வாழும் கலைப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய ஸ்ரீ.ஸ்ரீ.ரவிசங்கர் குருஜியின் வாழும் கலைப் பயிற்சி (பிராணாயமம், யோகாசனம், தியானம், சுதர்சனக் கிரியா) நல்லூர் வடக்கு ஸ்ரீ சத்திரசேகரப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இன்று 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை 3 நாட்கள் மாலை 4 மணி முதல் 7 மணி வரை இடம்பெறும். மேலதிக விபரங்களுக்கு 077 864 5971என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)





வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் விளையாட்டுத் திணைக்களம், சுற்றுலாப் பணியகம் மற்றும் வலி. தெற்கு பிரதேச சபை இணைந்து நடத்திய வடக்கு மாகாண சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் - 2025 நிகழ்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

# விசுவாவசு வருடம் குல தெய்வங்களை வழிபடுவோம், ஈழத்துச் சிதம்பரம் மகா கும்பாபிஷேகம் காண்போம், எல்லா நலனும் பெற்று உய்வோம்.

குரோதி வருட குரோதங்களை மறந்து திருப்புகழ். திருமுறைகள் ஓதுவோம். கிருபானந்தவாரியார் அவர்களுக்கு திருப்புகழ் சுவாமிகள் "திருமுருக கிருபானந்த வாரியார்" எனும் பெரும்மயான நாமத்தை வழங்கியபின். வயலூர் முருகன் ஆலய புனருத்தாரனம். கும்பாபிஷேகம் தொடர்ந்து பல ஆலங்கள் திருப்பணிகள் செய்த ஐயா அவர்களை வணங்கி தடைப்பட்டுள்ள ஆலயங்கள் ஈழுத்துச் சிதம்பரம். காரைநகர் களபூமி திக்கரை முருகன். மற்றும் பல கோவில்கள் மகாகும்பாபிஷேகம் சிறப்புற குருவருளும் சித்தர்கள் சிவ அருளும் இறைவன் திருவருளும் திரு அண்ணாமலை கோபுர வாயிலில் மயில் மேல் உலாவி வரும் முருகா என பிரார்த்திப்போம்.

கருணை சிறிதுமில் பறிதலை நிசிசரர்
பிசித அசனம றவரிவர் முதலிய
கலக விபரித வெகுபர சமயிகள் ...... பலர்கூடிக்
கலக லெனநெறி கெடமுறை முறைமுறை
கதறி வதறிய குதறிய கலைகொடு
கருத அரியதை விழிபுனல் வரமொழி ...... குழறாவன்
புருகி யுனதருள் பரவுகை வரில்விர
கொழியி லுலகியல் பிணைவிடி லுரைசெய
லுணர்வு கெடிலுயிர் புணரிரு வினையள ...... றதுபோக
உதறி லெனதெனு மலமறி லறிவினி
லெளிது பெறலென மறைபறை யறைவதொ
ருதய மரணமில் பொருளினை யருளுவ .....தொருநாளே

தருண சததள பரிமள பரிபுர
சரணி தமனிய தநுதரி திரிபுர
தகனி கவுரிப வதிபக வதிபயி ...... ரவிசூலி
சடில தரியநு பவையுமை திரிபுரை
சகல புவனமு முதவிய பதிவ்ருதை
சமய முதல்வித னயபகி ரதிசுத ...... சதகோடி
அருண ரவியினு மழகிய ப்ரபைவிடு
கருணை வருணித தனுபர குருபர
அருணை நகருறை சரவண குரவணி ...... புயவேளே
அடவி சரர்குல மரகத வனிதையு
மமரர் குமரியு மனவர தமுமரு
கழகு பெறநிலை பெறவர மருளிய ...... பெருமாளே

ஈழத்துச் சிதம்பரம் பேரின்பப்
பொருளினை அருளுவ கொருநாளே

திருப்புகழ்-563

கருணை என்பதே சிறிதும் இல்லாத அரக்கர்களுக்கு ஒப்பானவரும். புலால் உண்ணும் மறவரை ஒத்தவரும். கலகங்கள் செய்வதும். விபரீத உணர்ச்சியால் மாறுபாடான ஆரவாரம் செய்து. நீதி முறை தவறி அவரவர் முறை வரும் போதெல்லாம் பெரும் கூச்சலிட்டுக் கதறி. வாயாடித் திட்டி மொழியானது குழறி. நெறிதவறிப் பேசும் கலை நூல்களால். உருகித் தந்திர புத்தி ஒழிந்தால். எனது எனது என்னும் ஆசையாம் குற்றம் அற்றுப்போனால். அறிவில் எளிதாகப் பெறுதல் முடியும் என்று வேதங்கள் பறை யறைந்து சொல்வதான. ஒப்பற்ற - தோற்றம்- முடிவில்லாத பேரின்பப் பொருளை அடியேனுக்கு அருள் செய்யும் பாக்கியநாள் ஒன்று எங்களுக்கு கிட்டுமா திக்கரைமுருகா! ஈழுத்துச் சிதம்பரக் கூத்தா!

என்றும் இளமையோடு! நறுமணம் வீசும். சிலம்பணிந்த திருவடிகளை உடையவன். கவுரி. பகவதி. பயிரவி. திரிபுவி. உமை. சௌந்திரிகா. எல்லா உலகங்களையும் ஈன்று அருளிய பதிவிரதையாகிய பார்வதியின் பிள்ளையே. சிவந்த சூரியர்களை விட அழகான ஒளிவீசும் கருணையே அலங்கார உருவதான தேகத்தை உ[illegible] குருபரனே. திருவண்ணாமலை நகரில் வீற்றிருக்கும் சரவண[illegible]

தெய்வயானையம்மை உடனுறை முருகா பேரின்பப் பொருளினை அருளுவதுடன் ஆலயப் புணரத்தினம் சீபெற அருளுவதொரு நாளே.

நல்லூர் முருகன் வடக்கு உள் வீதியில் பதினெட்டு சித்தர் தரிசனம் பெற்று அவர்களது பாடல்கள் கடவுள் ஆன்மாவின் உள்ளத்தில் ஞானமயனாக நிலுவுகிறார்; அவர் அனுபூதியார் காணலே ஞானம் என்பர்.

**சிவவாக்கியர்-சித்தர்-தரிசனம்-31**

செய்ய தெங்கிலே இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்
ஐயன்வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன்வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பது இல்லையே!

**சிவவாக்கியர்-சித்தர்-அறிவுநிலை-192**

அன்னமிட்ட பேரெலாம் அனேககோடி வாழவே
சொன்னமிட்ட பேரெலாந் துரைத்தனங்கள் பண்ணலாம்
வின்னமிட்ட பேரெல்லாம் வீழ்வர்வெந் நரகிலே
கன்னமிட்ட பேரெலாம் கடந்துநின்ற திண்ணமே.

**சிவவாக்கியர்-சித்தர்-பாடல்-325**

ஐம்புலனை வென்றவர்க்கு அன்னதானம் ஈவதால்
நம்புலன்க ளாகிநின்ற நாதருக்க தேறுமோ
ஐம்புலனை வென்றிடா தவத்தமே உழன்றிடும்
வம்பருக்கும் ஈவதுங் கொடுப்பதும் அவத்தமே.

**சிவவாக்கியர் சித்தர்-வாக்கு-455**

திருவுமாகிச் சிவனுமாகித் தெளிந்துளோர்கள் சிந்தையில்
மருவிலே எழுந்துவீசும் வாசனைய தாகுவன்
கருவிலே விழுந்தெழுந்த கன்மவாதனை யெலாம்
பருதிமுன் இருளதாயப் பறியும் அங்கி பாருமே.


**சிவவாக்கியர் சித்தர்-வாக்கு-550**

சிவாயவசி என்னவும் செபிக்க இச்சகம் எலாம்
சிவாயவசி என்னவும் செபிக்கயாவும் சித்தியாம்
சிவாயவசி என்னவும் செபிக்கவானம் ஆளலாம்
சிவாயவசி என்பதே இருதலைத்தீ ஆகுமே.

இறைவன் வேண்டுவார் வேண்டுவதை ஈவான்! அன்பே சிவம்! அடியவர்கள் பொருட்டு ஆலயங்கள் புனருத்தானம் நிறைவாகவும். திருவிழாக்கள் முன் ஆதினகர்த்தாக்கள் காட்டிய வழியில் திருவிழாக்களை மக்களைக் காத்தல் பொருட்டு நடைபெறவும். காரைநகர் ஈழுத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சிவகாமி உடனுறை தில்லைக் கூத்தனையும் பூரண புஸ்கல ஆண்டி.. ஐயனாரையும். தேவருலகத்தாரும் நாகர் உலகத்தாரும். கடலால் சூழப்பட்ட சிவபூமியில் மக்களாகிய அடியார்களும் அருள்தர வல்ல திருவிழாக்கள் இன்பம் தர வல்லதுமானதை உணர்ந்து ஈழுத்துச் சிதம்பரம் தரிசிக்க முத்தி என்பது ஆன்றோர் அனுபவமாகும். திருமுறைத் திருப்பதிகங்களை நாளும் ஆலயங்களிலும் இல்லங்களிலும். உள்ளங்களிலும் ஓதி ஆலய மகா கும்பாபிசேகம் தரிசிப்போம்.

பட்டினத்தார் ஞானம்-100

பணிந்து துதிமனமே! பல்லிலுயிர்கட் கெல்லாம்
அனுவிலணு வாகியிருந் தானை- துணிவாய்
பிறவா திருக்கவும் பேரின்ப வாழ்வைத்
திறமாக நம்பிச் செலுத்து



**க.கு.க.சிவபாலன்,**
**போசகர், ஈழுத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் / சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய விசுவாவசு வருஷ வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும், 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நாகபுஸ்கரணி தீர்த்தத்தடாகத்தில் தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# அஞ்சல் மூல வாக்களிப்பு திகதிகளில் மாற்றம்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு சில தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இதன்படி 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அஞ்சல் மூல வாக்களிப்புகள் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்னதாக 22ஆம், 23ஆம் திகதிகளில் அஞ்சல் மூல வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதும், நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பான தீர்ப்பின் நிமித்தம், அந்தத் திகதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் அஞ்சல் மூல வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்ட மேலதிக நாட்களான 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (3-8)

# GOVPAY செயலியினால் வருமானத்தை இழந்தது அஞ்சல் திணைக்களம்

(கொழும்பு)

போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு விதிக்கப்படும் அபராதங்களைச் செலுத்துதல் உள்ளிட்ட சேவைகளுக்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட GOVPAY செயலியினால் அஞ்சல் திணைக்களம் பெருமளவான வருமானத்தை இழந்து வருவதாக ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன், அஞ்சல் துறையில் காணப்படும் நவீன வசதிகள் மூலமாகவும் இந்த சேவைகளைப் பெறமுடியும் என அந்த முன்னணியின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், குறித்த புதிய செயலி ஊடாக அஞ்சல் திணைக்களம் கணிசமான அளவு வருமானத்தை இழக்கின்ற போதிலும், அனைத்து வருமானமும் திறை சேரியைச் சென்றடைவதால் அரசாங்கம் இந்த சேவையினை ஆதரிக்கும் என அஞ்சல் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்துள்ளார். இதன்மூலம் மக்கள் இலகுவாக சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து விதிகளை மீறுகின்றவர்களுக்கு விதிக்கப்படுகின்ற அபராதங்களை இணையவழியில் செலுத்தும் வசதி கடந்த 11 ஆம் திகதி முதல் பரீட்சார்த்தமாக 12 இடங்களில் அமுல்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் GOVPAY செயலி ஊடாக உடனடியாக அபராதத்தைச் செலுத்துவதற்கு வழிசமைக்கப்படுவதுடன், அபராதம் செலுத்தப்பட்ட அடுத்த நொடியே வாகன சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரம் பொலிஸாரினால் விடுவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (3-8)

# சூழலுக்குப் பாதிப்பு இன்றி

## காற்றாலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்

## மன்னாரில் உறுதியளித்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

மன்னாரில் கடந்த காலங்களில் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாமல் காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறித்த திட்டங்கள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர் காலத்தில் மக்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னார் பஜார் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மன்னாரில் இருந்து தமிழ்நாடு, இராமேஸ்வரத்திற்கான பயணிகள் படகுச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் :தங்கராசா சதீஸ்
ஆதன இல : 57 வீதி: சோமசுந்தரம் வீதி வட்டாரம் : 08

வட்டாரம் 08 சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள, வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறையில் அமைந்துள்ள நளவு சுடலை எனும் பெயருள்ள நிலப்பரப்பு இரண்டேகால் விஸ்தீரணமுள்ள இவ் ஆதனத்தை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நம்பிஜயா என்பவர் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே என பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1999.09.26 ஆம் திகதிய 3922 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் இவ் ஆதனம் இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1999.09.26 ஆம் திகதிய 3923 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தம்பிஜயா விக்னேஸ்வரன் என்பவருக்கு வழங்கப்பட்டது. பின்னர் குறித்த ஆதனம் இதே நொத்தாரிசு முகதாவில் எழுதப்பட்ட 2003.01.23 ஆம் திகதிய 5102 ஆம் இலக்க உறுதி மூலம் தம்பிஜயா சிவநேசன் என்பவருக்கு அறுதியாக விற்கப்பட்டது. பின்னர் மேற்படி ஆதனம் பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் முகாவில் எழுதப்பட்ட 2007.07.22 ஆம் திகதிய 10032 ஆம் இலக்க உறுதி மூலம் தேவராசா பெண் நிமலராணி என்பவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. பின்னர் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் எழுதப்பட்ட 2014.04.10 ஆம் திகதிய 9982 ஆம் இலக்க உறுதிமூலம் தம்பிஜயா சிவநேசனுக்கு அறுதியாக விற்கப்பட்டது.

பின்னர் மேற்படி ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சிவானி வசந்தசேனன் முகதாவில் எழுதப்பட்ட 2019.03.26 ஆம் திகதிய 290 ஆம் இலக்க உறுதி மூலம் தேவராசா மகள் சுகன்யாவுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. பின்னர் மேற்படி ஆதனம் பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் எழுதப்பட்ட 2023.02.20 ஆம் திகதிய 12828 ஆம் இலக்க உறுதிமூலம் தம்பிஜயா சிவநேசனுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு அ.அருள்செல்வன் முகதாவில் எழுதப்பட்ட 2025.01.20 ஆம் திகதிய 366 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் தங்கராசா சதீஸ் என்பவருக்கு விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் எஸ்.கே.சிவானந்தன் அவர்களால் வரையப்பட்ட 2498 ஆம் இலக்க 2012.05.04 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் 02 பரப்பு குளி 9.03 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் வருமாறு.

வடக்கு :- ஒழுங்கை
கிழக்கு :-செல்லையா கைம்பெண் நல்லம்மாவின் ஆதனம்
தெற்கு :- ஒழுங்கை
மேற்கு :-சோமசுந்தரம் ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை தங்கராசா சதீஸ் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(3961)

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**


11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திருமதி
மயில்வாகனம் கண்ணகைப்பிள்ளை (சின்னம்மா)

திதி:சங்கடகரசதுர்த்தி

தோற்றம்-13.10.1924 மறைவு-19.04.2014



கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப்போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந் நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து- நீங்கள்
விண்ணோக்கிச் சென்று
பதினொராண்டு சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

(1032)

இல-140, பரமேஸ்வராசந்தி,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
ம.[illegible] குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் அமெரிக்காவை சீரழித்துவிட்டார் ட்ரம்ப்

### பைடன் குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் பதவியேற்றதை யடுத்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். குறிப்பாக ட்ரம்ப் அண்மையில் விதித்த புதிய வரிக் கொள்கை உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் தமது ஆட்சிக்காலம் நிறைவடைந்த பின்னர் முதல் முறையாக முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் அண்மையில் உரையொன்றை நிகழ்த்தினார்.

இதன்போது " ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் அமெரிக்க அரசாங்க நிர்வாகத்தை டொனால்ட் ட்ரம்ப் சீரழித்து விட்டார்" என ஜோ பைடன் விமர்சித்துள்ளார்.

அத்துடன் அவசர அவசரமாக ட்ரம்ப் கொண்டு வந்த மாற்றங்களால், அமெரிக்கர்களுக்கு கிடைக்கப்பெறும் சலுகைகளும் பாதிக்கப்படும்.

மேலும் இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை பேரழிவுகளை ட்ரம்ப் அரசு கொண்டு வந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜோ பைடன் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே இடம் பெற்று வரும் வர்த்தகப் போர் நாளுக்கு நாள் தீவிர மடைந்து வரும் நிலையில் சீனாவின் இறக்குமதிகளுக்கான வரியை அமெரிக்கா 245 சதவீதமாக உயர்த்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சீனா மீது வரியை உயர்த்தி

## உலக அரங்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்கா - சீனா இடையேயான வர் போர் தீவிரமடைந்து வரும் நிலையில் சீன இறக்குமதிகளுக்கான வரியை அமெரிக்கா சதவீதமாக உயர்த்தியுள்ளது.**

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்காவுக்கு, கனிமங்கள், உலோகம், காந்தம் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதியைச் சீனா அதிரடியாக நிறுத்தி பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சீன இறக்குமதிக்கான வரியை 145 சதவீதத்தில் இருந்து 245 சதவீதமாக உயர்த்தி அமெரிக்கா அறிவித்துள்ளது.


பாதுகாப்பு, மின்சார வாகனம், எரிசக்தி மற்றும் மின்னணுவியல் துறைகளில் பயன்படுத்தப்படும் 17 கனிமங்களின் தொகுப்பான 'உலகின் அரிய மண் தாதுக்களில் சுமார் 90 சதவீதத்தை சீனா உற்பத்தி செய்கிறது. தனது உற்பத்திக்கு அமெரிக்கா சீனாவையே அதிகம் சார்ந்துள்ளது.

இதனால் அமெரிக்காவின் ஆயுதங்கள், மின்னணுவியல், வாகன உற்பத்தியாளர்கள், எரோஸ்பேஸ் உற்பத்தியாளர்கள், செமிக

ண்டக்
மற்றும்
பயன்பா
களைத்
யான
லும் த
உருவா
மேலு
விமான
வனமா

## ஈரானின் அணு ஆயுத உருவாக்கம் அபாயகரமான நிலையில் உள்ளது

### எச்சரிக்கை விடுக்கும் ஐ.நா



ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கும் திட்டம் அபாயகரமான நிலையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ரஃபேல் க்ரோஸி எச்சரித்துள்ளார்.

நாட்டின் சர்ச்சைக்குரிய அணுசக்தித் திட்டம் குறித்து ஈரானிய அதிகாரிகளுடன் முக்கியமான விவாதங்களுக்காக அவர் டெஹ்ரானுக்கு புறப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு இந்த அறிக்கை வந்துள்ளது.

பிரான்ஸ் செய்திச் சேவையான லு மொண்டேவிடம் பேசும் போது க்ரோஸி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கீழ் அமெரிக்கா விலகியதைத் தொடர்ந்து, ஈரானின் அணுசக்தி நடவடிக்கைகள் மற்றும் 2015 அணுசக்தி ஒப்பந்தத்துடன் அதன் இணக்கத்தை கண்காணிக்கும் பணியை சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

அதன் பின்னர், ஈரான் அதன் யுரேனியம் செறிவூட்டல் நடவடிக்கைகளை கணிசமாக அதிகரித்துள்ளது.

வோஷிங்டனின் உறுதியான நிலைப்பாடு இருந்தபோதிலும், ஈரான் தனது திட்டம் முற்றிலும் சிவிலியன் என்று நிலைநிறுத்துகிறது.

இந்த நிலையில் ஈரானும் அமெரிக்காவும் நாளை சனிக்கிழமை திட்டமிடப்பட்ட இரண்டாவது சுற்று நேரடிப் பேச்சுவார்த்தைக்குத் தயாராகி வருகிறது.

அமெரிக்காவுடனான வரவிருக்கும் சுற்று அணு ஆயுதப் பேச்சுவார்த்தைகள் இந்த வார இறுதியில் ரோமில் நடைபெறும் என்பதை ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது.

இது பேச்சுவார்த்தை நடை பெறும் இடம் குறித்த முந்தைய நிச்சயமற்ற தன்மையை நீக்குகிறது.

ஈரானின் அணுசக்தி முன்னேற்றம் ஆயுதமயமாக்கலில் குறுக்கிடாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான தொழில்நுட்ப பாதுகாப்புகள் மற்றும் சரிபார்ப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும். (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ு மீண்டும்
# திய அமெரிக்கா!

## ்கில் பரபரப்பு

ா வர்த்தகப்
சீனாவின்
ிக்கா 245



ண்டக்டர் நிறுவனங்கள், மற்றும் பிற நுகர்வோர் பயன்பாட்டுக்கான பொருட்களைத் தயாரிக்க தேவையான மூலக்கூறுகள் முற்றிலும் தடைப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

மேலும் அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான "போயிங்"கிடம் இருந்து விமானங்கள் வாங்கத் தங்கள் நாட்டு விமான நிறுவனங்களுக்குச் சீனா தடை விதித்தது. மேலும் விமானம் தொடர்பான எந்தக் கருவிகளையும் அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் எனவும் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையிலேயே சீன இறக்குமதிக்கான வரியை ஏற்கனவே விதித்த 145 சதவீதத்தில் இருந்து 245 சதவீதமாக உயர்த்தி அமெரிக்கா அறிவித்துள்ளது. குறித்த அறிவிப்பு உலகரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## அமெரிக்கா - சீனா வர்த்தகப் போர்
## அனைத்து பகுதிகளிலும் தாக்கம் செலுத்தும்
### சிங்கப்பூர் பிரதமர் தெரிவிப்பு



(சிங்கப்பூர்)

அமெரிக்கா- சீனா இடையிலான வர்த்தகப் போரின் தாக்கம் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் உணரப்படும் என சிங்கப்பூர் பிரதமர் லோரன்ஸ் வொங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தனது புதியவரிகளை இடைநிறுத்திவைத்துள்ளமை குறித்து சிறிதும் நிம்மதி பெருமூச்சு விடமுடியாது எனக் குறிப்பிட்டுள்ள அவர், அமெரிக்காவின் அறிவிப்புகள் ஏற்கனவே உலகின் பல பகுதிகளில் நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகப் போரினால் இரண்டு நாடுகளிற்கும் இடையிலான வர்த்தகம் முற்றாக நின்று போகும் ஆபத்து ஏற்படும் என எச்சரித்துள்ள சிங்கப்பூர் பிரதமர் இதனால் ஏற்படும் மிக மோசமான பாதிப்பினை அந்த இரு நாடுகளும் மாத்திரம் அனுபவிக்கப் போவதில்லை முழு உலகமும் உணரப்போகின்றது என குறிப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தனது புதிய வரிகளை ஜுலை வரை ஒத்திவைப்பதாக அறிவித்துள்ள போதிலும் அமெரிக்கா பத்து வீத வரிகளை விதித்து வருகின்றது எனத் தெரிவித்துள்ள அவர் ஒரு அறிவிப்பின் மூலம் வரிகள் எந்த நேரத்திலும் மாறலாம் என்ற நிலையில் எந்த நிறுவனமும் நீண்ட கால முதலீடுகள் குறித்து திட்டமிட முடியாது என குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா சீனா இடையிலான வர்த்தகப் போர் இரு நாடுகளிற்கும் இடையிலான வர்த்தகத்தை துண்டிக்கும், என அவர் தெரிவித்துள்ளார்

நாங்கள் தற்போது பார்த்துக்கொண்டிருப்பது உலகபொருளாதாரத்தின் மறுஉருவாக்கத்தை என தெரிவித்துள்ள சிங்கப்பூர் பிரதமர் இது ஒருங்கிணைந்த விதத்தில் இடம்பெறவில்லை. மாறாக அமெரிக்கா, சீனாவை மையமாக கொண்டதாகக் காணப்படுகின்றது என சிங்கப்பூர் பிரதமர் தெரிவித்துள்ளார். (நி-8)

யான
ரான்
விலி
நுத்து
னும்
னிக்
வது
க்குத்
வரவி
யுதப்
வார
றும்
படுத்
றும்
மற்ற
முன்
லில்
றுதி
துட்ப
ர்ப்பு
லுத்
நி-8)

## கொங்கோ ஆற்றில் பயணித்த படகில் திடீர் தீப்பரவல்!

- 50 பேர் உயிரிழப்பு
- 100 பேர் காயங்களுடன் மீட்பு
- மீட்புப் பணி தீவிரம்



(கின்சாசா)

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஆறுகளில் படகு போக்குவரத்து மக்களின் முக்கிய போக்குவரத்தாக இருக்கிறது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்கிழமை இரவில் வடமேற்கு கொங்கோவில் உள்ள மடான் குமுத் துறைமுக பகுதியில் இருந்து போலோம்பா பகுதிக்கு ஒரு மோட்டார் படகு புறப்பட்டது. அந்தப் படகில் சுமார் 400 பேர் பயணம் செய்தனர்.

பன்டாக்கா பகுதியில் சென்று கொண்டிருந்த போது, திடீரெனப் படகில் தீ விபத்து ஏற்பட்டது.

இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த பயணிகள் உயிர் தப்பிப்பதற்காக படகில் இருந்து அடுத்தடுத்து ஆற்றில் குதித்து உள்ளனர். அப்போது துரதிஷ்டவசமாக படகும் ஆற்றில் கவிழ்ந்தது.

இந்தக் கோர விபத்தில் படகில் இருந்து 50 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர்.

சுமார் 100 பேர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். காணாமல் போன மற்றவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டனர்.

படகு தீப்பிடித்த விபத்துக்கு பெண் ஒருவர் சமையல் செய்ததே காரணம் என கூறப்படுகிறது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் அட்டைகளின் பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கடன் அட்டைகளின் பாவனை அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

கடந்த ஜனவரி மாதம் 2,018,996 ஆக இருந்த கடன் அட்டைகளின் பயன்பாடு பெப்ரவரி மாதம் 2,020,766 ஆக அதிகரித்துள்ளது.

இது 0.1 சதவீத அதிகரிப்பாகும்.

அத்துடன் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் பாவனையிலுள்ள கடன் அட்டைகள் 0.6 சதவீதம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (நி-8)

# புத்தாண்டு நிகழ்வில் பங்கேற்ற மாணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

எல்பிட்டிய பகுதியில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வில் கிரீஸ் மரத்திலிருந்து தவறிவிழுந்து பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எல்பிட்டிய, பிட்டிகல பகுதியிலுள்ள அமுகொடை ஸ்ரீ விஜயராம விகாரைக்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு நிகழ்விலேயே இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நிகழ்வுக்கு தயாராகி கொண்டிருந்தபோது 40 அடி உயரமான கிரீஸ் மரத்திலிருந்து தவறி கீழே விழுந்த பாடசாலை மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக பிட்டிகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த 16 வயதுடைய மாணவன் அண்மையில் நடைபெற்று முடிந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியவர் ஆவார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பிட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 400 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 600 | 450 | 600 |
| தக்காளி | 500 | 600 | 700 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 280 | 280 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 380 | 400 |
| கரட் | 600 | 550 | 600 | 620 | 600 |
| பூசணி | 250 | 220 | 300 | 220 | 200 |
| புடோல் | 200 | 200 | 250 | 230 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 150-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 150 | 260 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 500 | 450 |
| வெண்டக்காய் | 300 | 350 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 380 | 300 | 250 | 300 |
| பயற்றங்காய் | 150 | 120 | 200 | 150 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 380 | 450 | 400 | 500 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 500 | 800 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 2500 | 2500 |
| போஞ்சி | 400 | 650 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 350 | - | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 80-100 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 250 | 120 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 280 | 150 | 150-230 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 300 |
| வெங்காயப்பூ | 200 | -- | 400 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 359

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## கருப்பையின் உள்ளே...

நாம் இந்த உலகத்திற்கு வந்து சேருவதற்கு முன்னாலே ஒரு இடத்திலே கொஞ்ச நாள் தங்கி இருந்தோமே அந்த இடம் ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு? அதுதான் கருப்பை.

பத்து மாதம் அங்கே இருந்துதான் வந்திருக்கிறோம். இருந்தாலும் அங்கே என்ன நடக்கிறது என்பதைப் பற்றி யாருக்காவது நினைவு இருக்கிறதா? நிச்சயமாக இருக்காது.

இதுநாள் வரைக்கும் கருப்பைக்குள்ளே என்ன நடக்கிறது என்பதைப் பற்றி யூகமாகத்தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இப்போது கேளா ஒலி வரைவுகள் மூலம் அங்கே நடப்பதையெல்லாம் விவரமாகப் புரிந்துகொள்ள முடியும்.

கருப்பைக்குள்ளே இருக்கும் குழந்தை கொட்டாவி விடுவது, விரல்களை சப்புவது, கைக்கு எட்டுவதை பிடிப்பது, சோம்பல் முறித்தல், கொட்ட கொட்ட விழிப்பது, முகத்தைக் கோணிப்பது இவையெல்லாம் ஒரு ரெலிவிஷன் திரையிலே பார்க்க முடியும்.

அந்த அளவுக்கு மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது.

கருப்பைக்குள்ளே சிசு ஒரு திரவத்துக்குள்ளே மிதந்து கொண்டிருக்கும். கண் விழித்ததும் அது கொட்டாவி விட்டுக்கொண்டே கை கால்களை உதைத்தல், கைகளை நீட்டி தொப்புள் கொடியை பிடித்தல், அதோடு கொஞ்ச நேரம் விளையாடுதல். அதன்பின் கைக்கட்டை விரலை வாயிலே வைத்துக் கொள்கிறது.

தாயின் இதயத்துடிப்பு, செரிமானப் பாதையிலே ஏற்படும் சத்தங்கள் இதையெல்லாம் கேட்டுக்கொண்டே தாயின் குரல் கேட்பதை உணர்ந்து அதை கவனிக்கிறது.

தாய் எழுந்து நடக்கும் போது கருப்பை நீரின் லேசான குலுக்கலிலே மெய்மறந்து மறுபடியும் தூங்கிப் போகிறது.

கருப்பைக்குள்ளே மிகவும் அமைதியாக இருக்கும் என்று நினைக்காதீர்கள். ஒரு மைக் மூலமாக அங்கே உள்ள சத்தத்தை எல்லாம் பதிவு செய்திருக்கிறார்கள்.

தாயின் இதயத்துடிப்பு அங்கே டம்-டம் என்று கேட்டுக்கொண்டே இருக்கும். தாய் மூச்சு விடுவதும் கேட்டுக்கொண்டே இருக்கும்.

வயிற்றிலிருந்தும் குடலிலிருந்தும் வரும் பலவிதமான சத்தங்கள், இதைத்தவிர வெளி உலகத்திலே உள்ள சத்தமும் உள்ளே கேட்கிறதாம்.

அதனாலேதான் கருவுற்ற தாய்மார்கள் இருக்கும் அறையிலே ரேடியோவும் ரீ.வியும் அலரும் அளவுக்கு வைக்கக்கூடாது என்று சொல்லுவது உண்டு. சத்தம் போட்டுப் பேசுவதும் தவறு. சண்டை போடுவதும் தவறு. சத்தமான இடங்களிலிலே அவர்கள் இருக்கக் கூடாது.

ஒரு சிசு கருப்பையிலே இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட தாலாட்டுப் பாட்டை பாடிக்கொண்டே இருந்தால் அது அந்தப் பாட்டுக்கு ஏற்றபடி கை கால்களை ஒரு குறிப்பிட்ட வகையிலே ஆட்டக் கற்றுக்கொள்ளுமாம். குழந்தை பிறந்த பிறகு அதே பாட்டைப்பாடி அழுகின்ற குழந்தையை அமைதிப்படுத்தி விடலாம்.

இதுவரைக்கும் சொல்லியது மருத்துவர்கள் சொன்னவற்றைத்தான். இப்போது சொல்வது நான் சொல்வது.

அதாவது தாலாட்டு யார் பாடுவது?

குழந்தை வயிற்றிலே இருக்கும் போது தாய் தாலாட்டுப் பாடுவதுதான் நல்லது. அப்போதுதான் அது சுகமாக காலை ஆட்டும்.

அப்பாக்கள் தாலாட்டுப் பாடினால் என்ன ஆகும் தெரியுமா? வயிற்றில் இருக்கும் போதே குழந்தை ஒரு தீர்மானத்திற்கு வந்துவிடும். வெளியே வந்த பிறகு காலாட்டுவதற்குப் பதிலாக உதைக்க ஆரம்பித்துவிடும்.

ஒரு வீட்டில் தொட்டிலிலே ஒரு குழந்தை சத்தம் போட்டு அழுதுகொண்டிருந்தது. அப்பா தொட்டிலை ஆட்டிக்கொண்டிருந்தார்.

வெளியே போயிருந்த அம்மா திரும்பி வந்தார். சும்மா தொட்டிலை ஆட்டாதீர்கள். குழந்தை எப்படித் தூங்கும் ஒரு தாலாட்டுப் பாடக்கூடாதா என்றார்.

அது முடியாது என்றார் அப்பா. ஏன் என்றார் அம்மா?

நான் தாலாட்டுப் பாட ஆரம்பித்த பிறகுதானே தூங்கிக்கொண்டிருந்த குழந்தை இப்படி அழவே ஆரம்பித்தது என்றார் அப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்வில் பிளாஸ்ரிக் பயன்பாடு, விளைவுகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆபத்துக்கள்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

(சென்றவாரத் தொடர்ச்சி)

### பிளாஸ்ரிக் மறுசுழற்சியில் முன்னேற்றங்கள்

மறுவடிவமைப்பதை உள்ளடக்கிய பாரம்பரிய இயந்திர மறுசுழற்சி முறைகள், பெரும்பாலும் பாலிமர் சிதைவு மற்றும் மாசுபாடு தொடர்பான சவால்களை எதிர்கொள்கின்றன. மறுசுழற்சித்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்த புதுமையான தீர்வுகள் உருவாகி வருகின்றன.

வேதியியல் மறுசுழற்சி பிளாஸ்ரிக்குகளை அவற்றின் அடிப்படை மோனோமர்களாக உடைத்து, உயர்தர பொருட்களை உற்பத்தி செய்ய அனுமதிக்கிறது. இருப்பினும், மலிவு விலையில் மூலப்பொருட்களை வாங்குவது மற்றும் மறுசுழற்சி செயன்முறைகளின் பொருளாதார நம்பகத்தன்மையை உறுதி செய்வது உள்ளிட்ட சவால்கள் நீடிக்கின்றன. மேலும், மறுசுழற்சி விகிதங்களை மேம்படுத்துவதற்கு பொது விழிப்புணர்வு மற்றும் சரியான கழிவுப்பிரிப்பு மிக முக்கியமானவை.

### பயனுள்ள பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவ உத்திகள்

பிளாஸ்ரிக் மாசுபாட்டைக் கையாள்வதற்கு, வலுவான கொள்கை நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப கண்டு பிடிப்புகளுடன், குறைப்பு, மறு பயன்பாடு மற்றும் மறு சுழற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது.

பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைப்பதற்கு, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக்கின் பயன்பாட்டைக் குறைப்பது மிக முக்கியமானது. சமுதாயத்திற்கு அறிவூட்டுவதன் மூலமும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பைகள் மற்றும் கொள்கலன்கள் போன்ற மாற்று வழிகளை ஊக்குவித்தல் மற்றும் ஒருமுறை பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் பிளாஸ்ரிக் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் கொள்கைகளை செயற்படுத்துவதன் மூலம் இதை அடைய முடியும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் பிளாஸ்ரிக் பொருட்களின் முழு வாழ்க்கைச் சுழற்சிக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR) கொள்கைகள், மறுசுழற்சி செய்வதை மனதில் கொண்டு தயாரிப்புகளை வடிவமைக்கவும், கழிவு சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி உட்கட்டமைப்பில் முதலீடு செய்யவும் நிறுவனங்களை ஊக்குவிக்கின்றன. சுற்றுச் சூழலில் பிளாஸ்ரிக் நுழைவதைத் தடுக்க திறமையான கழிவு முகாமைத்துவ அமைப்புகள் அவசியம்.

பிளாஸ்ரிக் உற்பத்தி மற்றும் அகற்றலை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சில ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்ரிக்குகளைத் தடைசெய்வது, மறுசுழற்சி இலக்குகளை நிர்ணயிப்பது மற்றும் மாற்றுப் பொருட்களுக்கான ஆராய்ச்சியை ஆதரிப்பது ஆகியவை பிளாஸ்ரிக் மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான பயனுள்ள உத்திகளாகும். இலங்கை அரசாங்கத்தில், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்ரிக்குகள் மீதான விதிமுறைகள் மற்றும் தடை 2017 முதல் உள்ளது. குறிப்பாக 20 மைக்ரோனுக்குக் குறைவான தடிப்பு கொண்ட பொலித்தீன், சில பிளாஸ்ரிக் பைகள் மற்றும் உணவுக் கொள்கலன்களை தடை செய்துள்ளது. 2021 ஆம் ஆண்டில், அரசாங்கம் பிளாஸ்ரிக் உறிஞ்சிகள், மற்றும் பிளாஸ்ரிக் கலக்கிகளை தடை செய்தது. இலங்கையில் PET பாட்டில்களின் பயன்பாடு மற்றும் அகற்றலை ஒழுங்குபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் பிளாஸ்ரிக் இல்லாத முயற்சிகளை ஊக்குவிக்கின்றன. மேலும், ஊடக பிரசாரங்கள் நிலையான நடைமுறைகளை ஊக்குவிக்கின்றன.

புதிய பொருட்கள் மற்றும் மறுசுழற்சி தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்வது நிலையான தீர்வுகளை வழங்கும். உதாரணமாக, மக்கும் பிளாஸ்ரிக்குகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் திறமையான இரசாயன மறுசுழற்சி செயல் முறைகளின் வளர்ச்சி ஆகியவை பிளாஸ்ரிக் கழிவுகளைக் குறைப்பதற்கான நம்பிக்கைக் குரிய வழிகளை வழங்கு கின்றன.

### உலகளாவிய முயற்சிகள் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டங்கள்

பிளாஸ்ரிக் மாசுபாட்டின் உலகளாவிய தன்மையை சீராக்குவதற்கு எல்லா உலக நாடுகள், தொழில்கள் மற்றும் சமூகங்கள் எல்லாவற்றினதும் கூட்டு முயற்சிகள் தேவை. ஐக்கிய நாடுகள் சபையால் ஊக்குவிக்கப்பட்டவை போன்ற சர்வதேச ஒப்பந்தங்கள், பிளாஸ்ரிக் கழிவுகளை எதிர்த்துப் போராடுவதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அதற்கான வளங்களைத் திரட்டுவதற்கும் உதவுகின்றன.

கூடுதலாக, நீண்ட காலத்திற்கு பயன்படுத்தக்கூடிய பொதியிடல் பொருட்கள் மற்றும் அவற்றின் சுழற்சிமுறைப் பயன்பாட்டு மாதிரிகளில் கவனம் செலுத்தும் பெருநிறுவன முயற்சிகள் பிளாஸ்ரிக்கின் சுற்றுச்சூழல் தடயத்தைக் குறைக்க பங்களிக்கின்றன.

பொது விழிப்புணர்வும் தனிப்பட்ட நடவடிக்கைகளும் பிளாஸ்ரிக்கின் சுற்றுச்சூழல் தடயத்தைக் குறைக்க பங்களிக்கின்றன. குறைந்தபட்ச பிளாஸ்ரிக் பொதியிடல்களைக் கொண்ட தயாரிப்புகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும், நிலையான நடைமுறைகளைக் கொண்ட நிறுவனங்களை ஆதரிப்பதன் மூலமும், பிளாஸ்ரிக் மறுசுழற்சி திட்டங்களில் பங்கேற்பதன் மூலமும் நுகர்வோர் பிளாஸ்ரிக் பொருட்களால் ஏற்படும் மாசுபடலைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க முடியும். மறுசுழற்சி வழிகாட்டுதல்களையும் கழிவுப் பிரிப்பின் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தும் கல்வி பிரசாரங்கள், மாசுபாட்டைக் குறைப்பதற்கான முயற்சிகளுக்கு திறம்பட பங்களிக்க தனிநபர்களுக்கு அதிகாரம் அளிக்கும்.

பிளாஸ்ரிக் மாசுபாட்டால் ஏற்படும் சவால்கள் வலிமையானவை என்றாலும், புதுமையான மறுசுழற்சி தொழில்நுட்பங்கள், விரிவான கழிவு முகாமைத்துவ உத்திகள், கடுமையான கொள்கை நடவடிக்கைகள் மற்றும் தீவிரமான பொதுமக்களின் ஈடுபாடு ஆகியவற்றின் கலவையானது மிகவும் நிலையான மற்றும் மீள்தன்மை கொண்ட எதிர்காலத்தை நோக்கி வழி வகுக்கும்.


**கலாநிதி. ஆ.மஞ்சீவன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**இரசாயனவியற்றுறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 4
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 751



இறகை அடித்துக் கொள்வதைப் பார்த்தால் சண்டைக்குப் போவதாகவே தோன்றுகிறது. கடவுளே! அந்தப் பெண் புறாவுக்கு என்ன தைரியம் பாருங்கள்! இராஜாளியுடன் சண்டைக்குப் போகிறது! காதலனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக அந்தப் பயங்கர ராட்சதனுடன் போராடப் போகிறது! தாத்தா! இராஜாளி மனம் இரங்கும் என்று நினைக்கிறீர்களா? இரங்காது! இரங்காது! ஒருநாளும் இரங்காது! இம்மாதிரி எத்தனையோ புறாக்களை அது கொன்று தின்று கொழுத்துக் கிடக்கிறது! சண்டாள இராஜாளியே! இதோ உன்னைக் கொன்று போடுகிறேன்!" என்று கூறிக் கொண்டே ஆதித்த கரிகாலன் பக்கத்தில் கிடந்த ஒரு கூழாங்கல்லை எடுத்து வீசி எறிந்தான். அந்தக் கூழாங்கல் மண்டபத்தை நோக்கிச் சென்று அதன் ஒரு முனையில் பட்டுவிட்டுக் கீழே விழுந்தது.

ஆதித்த கரிகாலன், "ராட்சதனே! உனக்கு நன்றாய் வேண்டும்!" என்று சொல்லிவிட்டு, இடி இடி என்று பயங்கரமாகச் சிரித்தான்.

பேரப் பிள்ளையின் சித்த சுவாதீனத்தைப் பற்றி ஏற்கனவே கிழவருக்குச் சிறிது சந்தேகம் இருந்தது. அது இப்போது இன்னும் அதிகமாயிற்று.

"தாத்தா! ஏன் என்னை இப்படி வெறித்துப் பார்க்கிறீர்கள்? மண்டபத்தின் அருகில் போய்ப் பாருங்கள்" என்றான் கரிகாலன்.

அவ்விதமே மலையமான் மண்டபத்தைச் சற்று நெருங்கிச் சென்று கரிகாலனின் கல் விழுந்த இடத்தை உற்றுப் பார்த்தார். அங்கே ஒரு சிற்பம் காணப்பட்டது. அந்தச் சிற்பத்தில் இராஜாளி ஒன்று தன் கால் நகங்களில் ஒரு புறாவைக் கொத்தித் தூக்கிக் கொண்டிருப்பது போலவும், இன்னொரு புறா அந்த இராஜாளியுடன் பாயப் போவது போலவும் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருந்தது.

மலையமான் திரும்பி வந்து, "குழந்தாய்! எனக்கு வயதாகி விட்டது என்பது உண்மைதான்! கண் பார்வை முன் போல் துல்லியமாக இல்லை. அருகில் சென்று உற்றுப் பார்த்த பிறகு தான் தெரிந்தது நல்ல சிற்ப வேலை!" என்றார்.

"நல்ல சிற்ப வேலையா? சிற்ப அற்புதம் என்று சொல்லுங்கள் தாத்தா! மகேந்திரவர்மர் மாமல்லர் காலத்துச் சிற்ப சக்கரவர்த்தி யாரோ ஒருவன் இதையும் செய்திருக்க வேண்டும். முதலில் பார்த்ததும் உண்மையாகவே நடப்பது போலவே எனக்குத் தோன்றிவிட்டது!" என்றான் கரிகாலன்.

"ஆதித்தா! அற்புதம் அந்தக் கல்லிலே மட்டும் இல்லை! உன் கண்ணிலும் இருக்கிறது. உன் மனத்திற்குள்ளேயும் இருக்கிறது. இந்த வழியாக எவ்வளவோ பிரயாணிகள் தினந்தோறும் போகிறார்கள். அவர்களில் முக்கால்வாசிப் பேர் இந்தச் சிற்ப அற்புதத்தைக் கவனித்துக் கூட இருக்க மாட்டார்கள். மற்றும் பலர் பார்த்தும் பார்க்காதது போலவே போய்விடுவார்கள். உன்னைப் போல் ஒரு சிலர் தான் ஒரு சிற்பத்தைப் பார்த்து இவ்வளவு ஆச்சரியப் படுவார்கள்!"

"நான் ஆச்சரியப்படவில்லை, தாத்தா! கோபப் படுகிறேன். அந்த சிற்பத்தை இப்போதே இடித்துத் தள்ளிவிட வேண்டுமென்று எனக்கு ஆத்திரம் உண்டாகிறது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சேவலும் நரியும்



ஒரு காட்டுப் பகுதியில் ஒரு சேவல் வாழ்ந்து வந்தது. அந்தச் சேவல் ஒரு நாள் மாலை தன்னுடைய சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு மரத்தின் மேல் ஏறித் தூங்கச் சென்றது.

அப்போது அங்கு ஒரு நரி வந்தது. மரத்தின் மேல இருக்கின்ற சேவலைப் பார்த்த அந்த நரி, அடடா! இந்தச் சேவல் எவ்வளவு பெரிதாக இருக்கிறது. இதை அடித்து உண்டோம் என்றால் எப்படி இருக்கும் என்று யோசித்தது.

ஆனால் அந்தச் சேவல் மரத்தின் மேலே இருக்கிறதே. எப்படி அதைக் கீழே வர வைப்பது என்று யோசித்தது அந்த நரி. அப்போது தான் அதற்கு ஒரு யோசனை வந்தது. உடனே சேவலைப் பார்த்து சொல்லியது. ஏய் சேவலே உனக்கு ஒரு நல்ல செய்தி தெரியுமா? என்று. மரத்தின் மேலே இருந்த அந்தச் சேவல் கீழே வராமல் என்ன நல்ல செய்தி என்று கேட்டது.

அதற்கு அந்த நரி சொல்லியது. இந்த காட்டில் இருக்கின்ற எல்லா மிருகங்களும் பறவைகளும் சமாதானமாகப் போய் விட்டது. இனிமேல் யார் யாரையும் அடித்து உண்ணப் போவது இல்லை என்று சொல்லியது. அதைக் கேட்ட சேவலுக்கு ஒரு சின்ன சந்தேகம் வந்தது. இதை ஏன் இப்போது வந்து இந்த நரி தன்னிடம் சொல்கிறது என்று யோசித்தது. இருந்தாலும் நரியிடம் பாதுகாப்பாக இருக்க முடிவு செய்தது. தொடர்ந்து பேசிய நரி காட்டு மிருகங்கள் எல்லாமே நல்ல செய்தி கேட்டு நட்பாக மாறி விட்டது, நீயும் கீழே இறங்கி வா நாமும் நண்பர்களாக மாறி அந்த நல்ல செய்தியைக் கொண்டாடலாம் என்று சொல்லியது.

நரியினுடைய தந்திரத்தை பற்றித் தெரிந்து வைத்திருந்த அந்தப் புத்திசாலி சேவல், அப்படியா மிகவும் நல்லது. நரியாரே அங்க பாருங்கள் வேட்டை நாய்கள் கூட்டமாக வருகின்றன. வாருங்கள் அவற்றிற்கும் நல்ல செய்தியைச் சொல்லி நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம் என்று சொல்லியது.

என்னது வேட்டை நாய்கள் இந்தப் பக்கம் வருகிறதா என்று பயந்த நரி அங்கு இருந்து ஓட ஆரம்பித்தது. அப்போது அந்தச் சேவல் கேட்டது. ஏன் நல்ல செய்தி தெரிந்த நீங்கள் நண்பர்களைப் பார்த்து ஓடுகின்றீர்கள் என்று.

அதற்கு தன்னுடைய தந்திரத்தில் தோற்ற மாதிரி நரி சொல்லியது. அதாவது அந்த வேட்டை நாய்களுக்கு செய்தி தெரியாமல் கூட இருக்கலாம், அவை என்னைப் பார்த்ததும் முதலில் என்னைப் பிடித்துக் கொன்று விடும். அதனால் தான் ஓடுகின்றேன் எனச் எனச் சொல்லியது. நரியினுடைய தந்திரத்தை தன்னுடைய தந்திரத்தால் ஜெயித்த சேவல் அந்த மரத்தின் மேல் படுத்துத் தூங்க ஆரம்பித்தது.

நீதி : தந்திரக்காரன் எளிதில் ஏமாற்றப் படுகிறான். வல்லவனுக்கு வல்லவன் எப்போதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம் ஆனால் எதற்காகவும் உண்மையை தியாகம் செய்யக் கூடாது. – விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காரியம் ஆற்றுவதில் தீவிரமாய் இருங்கள்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்றைய தினம் (17) யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரத்தின் பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர், சில முக்கிய விடயங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தார்.

அதில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கக்கூடிய காணிகள் மற்றும் மூடப்பட்டிருக்கும் வீதிகள், தையிட்டி திஸ்ஸ விகாரை ஆகியவை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் உரையில் முதன்மை பெற்றிருந்தன.

இங்கு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உரையாற்றிய ஜனாதிபதி; காணாமல்போனவர்களின் உறவுகள் படுகின்ற வேதனையை நான் நன்கு அறிவேன். எனது சகோதரர் ஒருவரும் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

ஒருவர் இறந்துவிட்டால், அவர் தொடர்பில் அந்திமச் சடங்குகளை ஆற்றி ஆறுதல் அடைய முடியும்.ஆனால் ஒருவர் காணாமல் போனால், அவர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்பது தெரியாமல் சதா வேதனைப்படுகின்ற நிலைமை இருக்கும்.

எனவே பொலிஸாரிடம் – இராணுவத்திடம் – அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பகிரங்கப்படுத்துவோம் எனக் கூறிய ஜனாதிபதி அநுர, படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளை விரைவில் உரியவர்களிடம் கையளிப்போம் என்றும் உறுதி அளித்துள்ளார்.

இதேபோன்று தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பிலும் தீர்வு காணப்படும். எனினும் தையிட்டி திஸ்ஸ விகாரையை வைத்து வடக்கிலும் தெற்கிலும் சிலர் அரசியல் நடத்துகின்றனர்.

முதலில் இவர்கள் அந்த அரசியலைக் கைவிட வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுர தனது உரையில் பிரஸ்தாபித்துள்ளார்.

இங்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியவற்றை நம் அரசியல்வாதிகள் நிச்சயம் செவிமடுத்திருப்பர்.

எனவே அவர் கூறியதை விரைந்து அமுல்படுத்துவதற்கான தந்திரோபாயங்களை நாம் கையாள வேண்டும்.

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், இது யாழ்ப்பாணத்துக்கான அவரின் இரண்டாவது விஜயம். ஏலவே யாழ்ப்பாண செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார்.

இப்போது அவரின் யாழ் வருகை தேர்தல் பிரசாரத்துக்கானது. பரவாயில்லை. தேர்தல் முடிவுற்ற கையோடு ஒரு நிகழ்வை ஏற்படுத்தி ஜனாதிபதி அநுரவை தமிழ் அரசியல்வாதிகள் யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து, ஒரே மேடையில் அவருடன் அமர்ந்திருந்து எங்கள் பிரச்சினைகளை முன்வைக்க வேண்டும்.

தவிர, ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கேட்க வேண்டும்.

எனினும் இதைச் செய்வதில் எம்மிடம் இருக் கக்கூடிய பின்னடிப்புகள் எங்களின் பிரச் சினைகள் தீர்வதில் தாமதிப்புக்களை – கடி னங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

ஆக, தேர்தல் அரசியல் ஒருபுறமிருக்க, இந்த நாட்டின் ஜனாதிபதி மூலம் ஆற்ற வேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதில் நம் அரசியல்வாதிகள் நுட்பமாகவும் தீவிரமாகவும் செயலாற்ற வேண்டும்.

இதுவே இன்றைய அவசிய, அவசர தேவையாகும்.

# யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என குறிப்பிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை

## ஜனாதிபதியின் பரப்புரைக்கு பெரமுன கண்டனம்

(கொழும்பு) தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை உள்ளூராட்சிமன்றங்களுக்குத் தெரிவு செய்தால் உள்ளூராட்சி மன்ற அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது முறையற்றதொரு கருத்தாகும். யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று மக்களுக்கு குறிப்பிடும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களை நாங்கள் கைப்பற்றுவோம். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கிராம மத்துக்குச் சேவையாற்றியுள்ளது. ஆகவே 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதைப் போன்று இந்த முறையும் வெற்றி பெறுவோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தால் மாத்திரமே உள்ளூராட்சிமன்ற அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் தவறானதொரு கருத்தாகும். அரச தலைவர் என்ற வகையில்பதவிக்கு ஏற்றாற்போல் ஜனாதிபதி நடந்துகொள்ள வேண்டும்.

யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று மக்களுக்குக் குறிப்பிடும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு சிறந்த பாடம் புகட்டுவார்கள் என்றார். (ந-4,7)

## நயினாதீவில் மருத்துவ முகாம்

(நயினாதீவு) நயினாதீவு பிரதேச வைத்தியசாலையின் கண் நோயியல் நிபுணர்கள் தவிர்ந்த மற்றைய அனைத்து நோயியல் நிபுணர்களும் ஒரே நேரத்தில் கலந்து கொள்ளும் மாபெரும் மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை (19.04.2025) மேற்படி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே, இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாது அனைத்துப் பொது மக்களையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நயினாதீவு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (ந-4,7)

## புலம்பெயர்ந்தோர் நாடு திரும்ப வேண்டும்

(மன்னார்) வடக்கில் இருந்து பலர் புலம்பெயர் நாடுகளுக்கு சென்றுள்ளார்கள். அவர்கள் மீள நாட்டிற்கு வர வேண்டும் என ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

எமது நாட்டினை கட்டியெழுப்ப தங்கள் முதலீடுகளை நாட்டில் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து நாட்டைக் கட்டியெழுப்ப நாட்டிற்கு வருகை தரவேண்டும் என அழைப்பு விடுக்கிறோம் என்றார். (ந-4,7)

## போதைவஸ்து வியாபாரி பொலிஸாரால் கைது

(அம்பாறை) அம்பாறை இறக்காமம் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் போதைவஸ்து வியாபாரி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினருடன் விசேட புலனாய்வுப் பிரிவினர் இணைந்து குறித்த போதைப்பொருள் வியாபாரியின் வீட்டைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இதன் போது வியாபாரத்துக்காகக் கொண்டு வந்த ஐஸ் போதைப் பொருளை மீட்டதுடன் 32 வயதுடைய குறித்த வியாபாரியைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4,7)

## வாகனத் திருத்தகம் தீயில் எரிந்து நாசம்

### நானாட்டனில் சம்பவம்

(மன்னார்) மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானாட்டான் சுற்று வட்டத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள வாகனங்களுக்கான வயரிங் பழுது பார்க்கும் கடை ஒன்றில் நேற்று மாலை ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக அந்தக் கடை முற்றாக எரிந்து சேதமாகியுள்ளது.

இதனால் கடைக்கு உள்ளே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டிகளும் முற்றாக எரிந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

அருகிலுள்ள ஆலயத்தில் பெரிய வியாழன் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் அங்கிருந்த இளைஞர்கள் ஓடி வந்து குறித்த தீப்பரவலை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் கடை முற்றாக எரிந்து அதற்குள்ள இயந்திரப் பொருட்களும் எரிந்து சாம்பலாகி உள்ளன.

குறித்த கடையில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ந-4,7,285)

## வேலணை சாட்டிப் பகுதியில் ஐஸ் போதைவஸ்துடன் கைதானோருக்கு மறியல்

(ஊர்காவற்துறை) தனியார் தங்குமிடம் ஒன்றில் ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இரு இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வேலணை சாட்டி கடற்கரைப்பகுதியில் உள்ள தனியார் தங்குமிடம் ஒன்றில் ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு இளைஞர்கள் தங்கியுள்ளதாக ஊர்காவற்துறை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் புதன் கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இருவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விசுவாவசு வருஷ’ புத்தாண்டு பலன்கள்

## குடும்பத்தின் மீது அதிக பற்றும் பாசமும் கொண்ட கடக இராசி நேயர்களே!






கிரகநிலை - ராசியில் செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - சுக ஸ்தானத்தில் சந்திரன் - அஷ்டம ஸ்தானத்தில் சனி - பாக்கிய ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன் - லாப ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம். 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார். 06-03-2026 அன்று சனி பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11-05-2025 அன்று குரு பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-10-2025 அன்று குரு பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம். 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் இராசியில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி.

**பலன்கள்:** குடும்பத்தின் மீது அதிக பற்றும் பாசமும் கொண்ட கடக இராசி நேயர்களே! உங்கள் எண்ணங்களில் தெளிவும் செயல்களில் ஆற்றலும் உண்டாகும். நெடுநாளாக நடந்து கொண்டிருந்த வழக்குகளில் சாதகமான தீர்ப்புக் கிடைக்கும். விடயங்களை மேலோட்டமாகப் பாராமல் அவற்றின் சூட்சுமத்தைப் புரிந்து கொள்ளும் சக்தி உண்டாகும்.

வருமானம் சிறப்பாக இருக்கும். புதிய முதலீடுகளில் ஈடுபடுவீர்கள். நினைத்தது கைகூடும். உங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தவர்கள் உங்களை நாடி நட்பு கொள்வார்கள். சமூகத்தில் அதிகமான செல்வாக்கு உண்டாகும். எதிரிகளுக்கும் உதவி செய்து அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

வெளிநாட்டிலிருந்து நற்செய்தி ஒன்று வந்து சேரும். அதேநேரம் புறம் பேசுபவர் களின் உறவைத் தவிர்த்து விடவும். ஆடை, ஆபரணம், பொன், பொருள் சேர்க்கை, வீடு, நிலம், வாகனம் ஆகியவை வாங்கும் யோகங்களும் உண்டாகும்.

குடும்பத்துடன் குலதெய்வ வழிபாடுகளைச் செய்வீர்கள். குடும்பத்தை விட்டுப் பிரிந்தவர்கள் மறுபடியும் குடும்பத்துடன் இணைவர். குடும்பத்தில் திருமணம் புத்திரபிராப்தி ஆகியவைகளும் நடக்கும். உடல் ஆரோக்கியம் சிறப்பாகத் தொடரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். ஆன்மிக ஆலய விடயங்களிலும் ஈடுபடுவீர்கள். பொது ஜனத்தொடர்பு பலப்படும்.

தவறு செய்யும் நண்பர்களை நேரடியாகக் கண்டிப்பீர்கள். குடும்பத்தில் சுகம் நிறையும். உடன்பிறந்தோரின் நேசத்தைப் பெறுவீர்கள். உங்கள் வாக்குக்கு நன்மதிப்பும் உண்டாகும். கொடுத்த வாக்கையும் எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள்.

நண்பர்களுடன் சேர்ந்து புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். திருட்டுபோன பொருளும் திரும்பக் கிடைக்கும். உங்களுக்குக் கெடுதல் செய்ய நினைத்தவர்கள் மனம் மாறி நன்மை செய்வார்கள். சிலருக்கு வீடு மாற்றம், ஊர் மாற்றம் உண்டாகும்.

மேலும் குழந்தைகளுக்குச் சிறிது அநாவசியச் செலவு செய்ய நேரிடும். அத்தோடு வழக்குகளும் தாமதமாகும். கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் காரியமாற்ற வேண்டிய கால கட்டமிது.

**உத்தியோகத்தர்கள்** சற்றுக் கூடுதலாக உழைக்க நேரிடும். மேலதிகாரிகளின் கெடுபிடிகளையும் சந்திப்பீர்கள். உழைப்பிற்கேற்ற ஊதியத்தைக் காண்பீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வுகளைப் பெறுவதில் தாமதங்கள் உண்டாகலாம். எண்ணங்கள் பூர்த்தியாகும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். அலுவலக ரீதியான பயணங்களைத் தள்ளிப் போடவும்.

**வியாபாரிகள்:** கொள்முதல் லாபம் அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் கூட்டாளிகள் உங்களுக்கு உதவுவர். தொடரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். திட்டமிட்ட வேலைகளில் கடுமையாக உழைப்பீர்கள். புதியவர்களிடம் உங்கள் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**அரசியல்வாதிகள்:** எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். புகழும் செல்வாக்கும் அதிகரிக்கும். கட்சி மேலிடத்தின் கவனத்தை ஈர்ப்பீர்கள். அதேசமயம் புதிய பொறுப்புகளைக் கவனத்துடன் கையாளவும். தொண்டர்கள் ஆதரவாக இருப்பார்கள். யோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கலைத்துறையினர்:** புதிய நட்புகளால் சந்தோஷம் கிடைக்கும். வேலையில் மட்டுமே குறியாக இருக்கவும். திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். ரசிகர்களின் ஆதரவும் குறைவாக இருக்காது. நிதானமாகவும், பொறுமையுடனும் இருந்து புதிய ஒப்பந்தங்களைப் பெறலாம்.

**பெண்கள்:** குடும்பத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். வருமானம் சீராக இருப்பதால் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சேமிப்பு விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள். ஆடை அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மாணவர்கள்:** கல்வியில் நல்ல மதிப்பெண்களை எடுப்பார்கள். பெற்றோர்கள் உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவர். ஞாபகசக்தி வளர விடியற்காலையில் பயிற்சிகளை மேற்கொள்ளவும்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம்:** இந்த ஆண்டு இதுவரை இருந்து வந்த பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பின்தங்கிய நிலையிருப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வார்கள். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**பூசம்:** இந்த ஆண்டு உங்களுடைய உடல்நலத்தை பொறுத்த வரை கால் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட உபாதைகள் வரலாம். சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம். நல்ல பணப்புழக்கம் இருக்கும்.

**ஆயில்யம்:** இந்த ஆண்டு எடுத்த காரியம் அனுகூலத்தைக் கொடுக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீண்விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தில் தம்பதிகளிடையே இருந்து வந்த பிரச்சினைகள் சுமூகமாக மறையும்.

**பரிகாரம்:** முடிந்தால் திருவண்ணாமலை அல்லது பர்வதமலையை பௌர்ணமியன்று வலம் வரவும். "அல்லி மலரை" அம்பாளுக்கு திங்கள் தோறும் சாத்திவர குழப்பங்கள் அகலும்.

மனம்தெளிவடையும். மேற்கு, வடக்கு திசைகள் அதிஷ்டத்தைக் கொடுக்கும். சந்திரன் - குரு நன்மையைத் தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன் பதவி...

வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் ஜனாதிபதியின் குறித்த கருத்துத் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஆணைக்குழு ஜனாதிபதியின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தில் தேர்தல் சட்டத்தினை மீறும் அறிக்கைகளை வெளியிடுவதனைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஜனாதிபதியின் குறித்த கருத்துத் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7,4)

## தமிழ்த் தேசியமே...

தமிழ்த் தேசியமே எமது இருப்பின் அடிப்படையாகும் எனப் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு, பூநகரி பிரதேச சபையின் கரியாலை நாக படுவான் வட்டாரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, ஈழத் தமிழினத்தின் இருப்புக்கான அடிப்படையான தமிழ்த் தேசியத்தை அடியோடு சிதைத்தழிக்கும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் இயங்குபவர்கள், தமிழ்த் தேசியத்தை வெற்றுக் கோசம் என வரையறை செய்வதைக் காண்கிறோம். தனது இருப்பை நிலைநிறுத்தும் தமிழினத்தின் அடியாதாரமே அதுதான் என்பதை இந்தத் தேர்தலின் முடிவுகளே உறுதி செய்யும் என்றார்.

கரியாலைநாகபடுவான் வட்டார வேட்பாளர் பத்மசேனன் லிடான் ரியூடர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பூநகரி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், இரணைதீவு வட்டார வேட்பாளர் பிலிப் றெஜினோல்ட் நிவிந்தன் ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன் குறித்த வட்டாரத்தின் வேட்பாளர் சுகந்தி சிவகுமார் உட்பட கட்சியின் வட்டாரக்கிளை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,4)

## திஸ்ஸ விகாரை...

களாக இருந்தால் எம்மால் அந்த பிரச்சினையை மிக இலகுவாகத் தீர்க்க முடியும்.

விகாரை காணி உரிமையாளர்கள், விகாரைக்குரிய விகாராதிபதி, நாக விகாரை விகாராதிபதி ஆகியோர் இணைந்து பேசி அதற்கு ஒரு தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டில் தொல்பொருள் எச்சங்கள் காணப்பட்டால் அது தமிழா, சிங்களமா, முஸ்லிமா, இந்துவா, பௌத்தமா எனப் பார்க்காது எமது நாட்டின் தொல்லியல் மரபு, எமது பண்பாடு என ஒரு நாட்டு மக்களாகச் சிந்திக்க வேண்டும்.

ஆனால் இனவாதிகள் அப்படி பார்ப்பதில்லை. அதன் ஊடாக இனவாதத்தை தூண்ட முயல்கின்றனர். அப்படியான இனவாதக் குழுக்களை மக்கள் இனம் கண்டு, அவர்களை தோற்கடித்துள்ளார்கள்.

இனி அவர்கள் எந்த வேடம் அணிந்து வந்தாலும் அவர்கள் இனவாதிகள் என்பதனை மக்கள் இனம்கண்டு அவர்களை தோற்கடிப்பார்கள். அதேவேளை தேசிய மக்கள் சக்தி இனியும் நாட்டில் இனவாதம் தோன்ற இடமளிக்காது என்றார். (ந-7,4)

## மன்னார் - இரா...

நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இந்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் குறித்த படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவித்தார். (ந-7,4)

*(மற்றுமொரு செய்தி உள்ளே)*

## காணாமல்...

போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு மேலும் கருத்துரைத்த அவர், பொலிஸாரிடமும் இராணுவத்திடமும் அரசாங்கத்திடமும் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிக்கொணர்வோம்.

ஒருவர் இறந்தால் அவருக்காக அழுது, அவருக்குச் செய்ய வேண்டிய கிரியைகளை செய்து சில காலத்தில் ஆறுதல் அடைவோம். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்பது தெரியாமல் படும் வேதனைகளை நான் நன்கு அறிவேன். எனது சகோதரர்கூட காணாமல் ஆக்கப்பட்டவரே. அதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் வலி எனக்குப் புரியும்.

எமக்கு அமைதி தேவை. அதற்காக அவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கண்டறிந்து வெளிப்படுத்துவோம் என்றார். (ந-7,4)

## யாழ்ப்பாண...

யாற்றிய ஜனாதிபதி யாழ்ப்பாண பொது நூலகம் இனவாதிகளின் காழ்ப்புணர்ச்சியால் எரியூட்டப்பட்டு அங்கிருந்த பெறுமதிவாய்ந்த அரிய நூல்கள் மற்றும் ஏட்டுச்சுவடிகள் சாம்பலாக்கப்பட்டதை நினைவுகூர்ந்தார்.

இது குறித்து கருத்துரைத்த ஜனாதிபதி, யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப்பட்டமை எமது இதயங்களைக் காயப்படுத்தியுள்ளன. நூலகம் எரிக்கப்பட்டதனை இனவாதத்தின் உச்சமாகவே நாம் பார்க்கின்றோம். ஆகவேதான் யாழ்.நூலகத்தினைப் புனரமைக்க அதிக நிதியை ஒதுக்கினோம் என்றார். (ந-7,4)

## ஊடகங்கள்...

பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும், பலாலி வீதி கட்டுப்பாடுகள் இன்றி முழுமையாக திறக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் ஊடகங்கள்

# வடக்கு கடல் வளங்களை அழிக்க அனுமதியோம்

## ஜனாதிபதி அநுர

(யாழ்ப்பாணம்)

வடக்கு கடற்பரப்பில் உள்ள கடல் வளங்களை அழிக்க அனுமதிக்க மாட்டோம். அதை நம்பி பெருமளவான கடற்தொழிலாளர்கள் உள்ளனர். அந்த வளங்களை அழித்து அவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்க முடியாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மேலும், வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அழகிய கடற்கரைகள் உள்ளன. அவற்றினை சுற்றுலாத் தளங்களாக மேம்படுத்துவோம்

வடக்கு கடல் வளங்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதனை எடுங்கள் என கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளோம் என்றார். (ந-7,4)

ஊடாக முன்வைக்கும் வகையில் வசாவிளான் சந்திக்கு அண்மையில் ஊடக சந்திப்பொன்றினை "வலி. வடக்கு காணி விடுவிப்புக்கான அமையம்" எனும் அமைப்பு நேற்றையதினம் ஏற்பாடு செய்திருந்தது.

குறித்த ஊடக சந்திப்பு ஆரம்பமாக இருந்த சமயம் அவ்விடத்திற்கு வருகை தந்த பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவ்விடத்தில் ஊடக சந்திப்பினை நடத்த முடியாது என ஊடக சந்திப்புக்கு வந்திருந்தவர்களை அச்சுறுத்தி, அவர்களை தனித்தனியே ஒளிப்படங்கள் எடுத்ததுடன், அவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றையும் பதிவு செய்தனர்.

அத்துடன் அங்கிருந்த ஊடகவியலாளர்களையும் ஒளிப்படங்கள் எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

ஆயினும் பொலிஸாரின் அச்சுறுத்தல்களையும் மீறி குறித்த ஊடக சந்திப்பு அவ்விடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,4)

## போரால்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் போர் புரிந்தோம். அதனால் என்ன நடந்தது. அழிவுகளைத்தான் சந்தித்தோம். எம் உறவுகளை இழந்தோம். வடக்கிலும் தெற்கிலும் அதுவே நடந்தது. மீளவும் அப்படி ஒரு நிலை எமக்கு வேண்டாம்.

எங்கள் தலைமுறையுடன் போர் வடுக்கள் மறையட்டும். அடுத்த தலைமுறை போர் இல்லாது சமாதானமாக வாழ வேண்டும். அவர்கள் அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும்.

மீண்டுமொரு யுத்தம் தோன்ற அனுமதிக்க மாட்டோம். அதனால் பாதுகாப்பு காரணத்திற்காகக் கையகப்படுத்தியுள்ள காணிகளை அதன் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைப்போம்.

பாதுகாப்புக் காரணங்களுக்கு என தமிழ் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் காணிகளைப் பாதுகாப்புத் தரப்பிடம் இருந்து மீள பெற்று காணி உரிமையாளர்களுக்கு கையளிப்போம்.

காங்கேசன்துறையில் ஒரு ஜனாதிபதி மாளிகை உள்ளது. அது எமக்குத் தேவையில்லை. அதனை யாழ்ப்பாண மக்களுக்குப் பயன்படக்கூடிய வாறு மக்களுக்காக அதனை வழங்க வுள்ளோம்

இன்னொரு யுத்தம் நாட்டில் தோன்றும் என்ற அச்சத்தில் கையகப்படுத்தப்பட்ட காணிகளை கடந்த அரசாங்கம் மீள கையளிக்கவில்லை. ஆனால் நாங்கள் இன்னொரு யுத்தம் நாட்டில் தோன்ற அனுமதிக்க மாட்டோம். அதனால் பாதுகாப்பு காரணங்களுக்கு என காணிகள் தேவையில்லை. விரைவில் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிப்போம்.

மூடப்பட்ட வீதிகளையும் படிப்படியாகத் திறந்து மக்கள் பாவனைக்கு கையளிக்கிறோம். வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் மூடப்பட்டு இருந்த வீதிகளை திறந்துள்ளோம்.

கொழும்பில் பாதுகாப்புக் காரணமாக மூடப்பட்ட வீதிகளை திறக்கும் போது ஏன் யாழ்ப்பாணத்தில் வீதிகளை திறக்கக்கூடாது. நாட்டில் பாதுகாப்பு காரணமாக மூடப்பட்ட வீதிகளைத் திறப்போம் என்றார். (ந-7,4)

## தேவாலயங்...

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் அனைத்து மாகாண உதவிப் பொலிஸ்மா அதிபர்கள், பிராந்திய பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையில் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடுவர் என எதிர்பார்க்கப்படும் தேவாலயங்களை இனம் கண்டு அவற்றைச் சூழவுள்ள பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும், பிரதான வழிபாடுகள் நடைபெறும் தேவாலயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்புப் பணிகளில் பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ந-7,4)

## குளத்தில்...

நேற்று எட்டுப் பேர் அடங்கிய நண்பர்கள் சிட்டிவேரம் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் நீராடியபோது மேற்படி இளைஞர் தாமரைக் கொடியில் சிக்குண்ட நிலையில் மீட்கப்பட்டு வரணி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின்னர் மேலதிக சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது அவர் உயிரிழந்துள்ளார்.


சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-7,4,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீரகம் தேவை

அவசரமாக A+ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.
வயது எல்லை 25 - 40
தொடர்புகளுக்கு :
077 041 6405
Whatsapp
0031617990096(ஹொலன்ட்)
(1036)

# அதிகரித்த வெப்பம்
## அவதானமாக இருங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலையானது தற்போதைய நாட்களில் எச்சரிக்கை மட்டத்துக்கு அதிகரித்து வருகின்றமையால் அவதானமாக இருக்குமாறு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் என்.சூரியராஜா அறிவுறுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது, இதனைத் தெரிவித்தார்.

நாம் நீண்ட நேரம் வெய்யிலில் இருப்பது நீரிழப்பு, தசைச் சிதைவு, அதிகபடியான சோர்வு மற்றும் பக்கவாதத்திற்கு வழிவகுக்கும்.

எனவே இதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றைய வெப்பநிலையானது 34.2 பாகை செல்சியஸாக பதிவாகியிருந்தது.(ந-4,7)

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
Premium Lands with 100% Legal Security
8 இலட்சம் முதல்
*தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.



விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!

முல்லை
எழுதுமட்டுவாழ்

மருதம்
கிழக்கு அரியாலை

குறிஞ்சி
மலையகம்
(ஹப்புத்தளை நகர்)

நெய்தல்
மட்டக்களப்பு
(வாவிக் கரையோரம்)

ஏப்ரல் 14th திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!
இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!

இனிமையான வாழ்விற்கு..!
GOODGIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 743 5557
(C-2729)

கணக்கீடு
A/L 2027
ஆரம்பம்
DCM யாழ் நகர்
சனி 10.00 A.M
CCA சுன்னாகம்
செவ்வாய் 3.00 P.M
Niru கோண்டாவில்
சனி 7.00 A.M
பிரத்தியேக வகுப்பு கொக்குவில்
சனி 3.00 P.M
S.தவா
B.Com(Hons)(Acc.spl) PGDE,M.A in Edu
077 239 5858
(3966)

Pearson International College



♦இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
♦கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
♦எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
♦இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching
074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA
TESL Ontario
(1009)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

ICT
A/L 2027
ஆரம்பம் :
20.04.2025
ஞாயிற்றுக்கிழமை 8.45 am
Evershine Education Centre
123, Brown Road, Jaffna
(3959)
S.Gowsigan (B.Tech, PGDE) 0773784053
அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.

DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2027
கலை. வர்த்தகப் புதிய பிரிவு
நாளை 19.04.2025 சனி காலை 8.00 மணி
நிர்வாகம் : 0777789815
(C-2735)

தவறிவிட்டது

வீட்டின் திறப்புக் கோர்வை ஒன்று கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை பன்னாலை, அம்பனை, அளவெட்டி. மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், இணுவில் ஆகிய பகுதிகளில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.
077 638 4114
(C-2737)

வேலையாட்கள் தேவை

யாழிலுள்ள பிரபல சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
♦ சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
♦ உணவு பரிமாறுபவர் (தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு :
077 469 6695, 070 664 7466
(3964)

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள கல் அறுக்கும் யாட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு அனுபவமுள்ள வேலை ஆட்கள் உடனடியாகத் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
077 954 1593
(3963)

பணியாளர்கள் தேவை

♦ காசாளர்
♦ கணக்காளர்
♦ அலுவலக உதவியாளர்
மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு அனுபவம் உள்ள பணியாளர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.
JAFFNA SMART PRINTING
255, Stanley Road, Jaffna. Tel : 021 221 2958
(1034)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2736)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org